விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 16 திங்கட்கிழமை (03.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 288

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 5000 பேரின் கையொப்பம் இருந்தால் போதும்

# இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை

# அமெரிக்கா புது வியூகம் அமைக்கிறது

(வாஷிங்டன்) இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்த ஆதரவு தருமாறு அனைத்துலக மன்னிப்புச் சபை வெள்ளை மாளிகையிடம் கையளித்த மனு தொடர்பில், ஐயாயிரம் பேரின் கையொப்பத்துடன் குறித்த மனு கையளிக்கப்பட்டால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படுமென வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இலங்கையில் படையினர் மேற்கொண்ட போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்திவரும் சர்வதேச மன்னிப்புச் சபை, போர்க் குற்ற விசாரணை நடத்த ஆதரவு தருமாறு வெள்ளை மாளிகையில் மனுவொன்றைக் கையளித்துள்ளது.

இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலமாக வெள்ளை மாளிகை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இதில், எதிர்வரும் 29-ம் திகதிக்கு முன்னதாக போர்க்குற்ற விசாரணை தேவை என்ற கோரிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துலக ஊடகங்கள் மூலம் ஜனாதிபதிக்கான அழைப்பாணை

### அமெ. சட்டவாளர் நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய 30 பக்க அழைப்பாணையை அமெரிக்காவின் அரசியல் அமைப்பு சட்டவாளர் புரூஸ் பெய்ன் இலங்கை உட்பட சுமார் 100 ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளார்.

செப்ரெம்பர் 30-ம் திகதி இந்த ஆவணம் வெளியிடப்பட்டுள்ளதாக சட்டவாளர் புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகளுக்குப் பொறுப்பானவர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது சித்திரவதைக்கு உள்ளானோரைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

படையினரால் படுகொலை செய்யப்பட்ட மூவரின் சார்பில் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 30 மில்லியன் டொலர் நட்டஈடு கோரும் வழக்கில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை ஏற்க இலங்கை நீதி அமைச்சு மறுத்துவிட்டது.

இதையடுத்து ஊடகங்களின் மூலம் அழைப்பாணையை அனுப்ப அனுமதிக்குமாறு புரூஸ் பெய்ன் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்திடம் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் மனித உரிமை குறித்து சம்பந்தன் -ஸ்டீவன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய மனிதவுரிமை நிலைமைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு விவகாரங்களுக்கான உபகுழுவின் தலைவர் ஸ்டீபன் சபெட் கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்க குடியரசுக் கட்சியின் ஓகையோ மாநிலப் பிரதிநிதியும், அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய கிழக்குக்கான காங்கிரஸ் உப குழுவின் தலைவருமான ஸ்டீபன் சபெட் இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோதே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தல் இடம்பெற்ற இராப்போசன விருந்தின் போது ஸ்டீபன் சபெட் மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு இடையே இரண்டு மணி நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பின்போது இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பாக சம்பந்தனுடன் ஸ்டீபன் சபெட் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

குறிப்பாக, இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## புனரமைப்பு திட்டங்களுக்கு கடன் வழங்குகிறது ஜப்பான்

இயற்கை அனர்த்த பேரழிவுகள் மற்றும் சமூக பொருளாதார ஈடேற்றத்தின் பொருட்டு ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு கடனுதவி வழங்க முன் வந்துள்ளது. இதன் போது புனரமைப்பு திட்டங்களுக்காக 9 ஆயிரத்து 940 மில்லியன் ரூபாய் கடனுதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

சமூக பொருளாதார நடவடிக்கைகளை கட்டியெழுப்பவும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்கள் மீண்டும் அவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளாகாது பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இந்த கடனுதவித் தொகை (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் எண்ணெய் வளம் கண்டுபிடிப்பு செல்வந்த நாடாக இலங்கை மாறும்-ஜனாதிபதி

(கண்டி)

எதிர்காலத்தில் இலங்கை ஒரு செல்வந்த நாடாக மாறக்கூடிய தகவல் தமக்கு நேற்று(இன்று) கிடைத்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கண்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்று இலங்கையில் எரிபொருள் மற்றும் பெற்றோலிய வளம் இருப்பதாக நேற்று (இன்று) காலை எனக்கு அறிவித்தது.

இதன் காரணமாக நாம் எதிர்காலத்தில் செல்வந்த நாடாகக் கூடிய சாத்தியம் இருக்கின்றது.

மன்னார் கடற்படுகையில் எரிவாயு வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதியில் பெற்றோலிய அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கெய்ர்ன் இந்தியா எனும் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாத முற்பகுதியில் கிணறொன்றை தாம் அகழ்ந்ததாகவும் கடந்த வாரம் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது எனவும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மன்னார் கடற்படுகையில் எஸ்.எல். 2007-01-001 எனக் குறிப்பிடப்பட்ட பகுதியில் பெற்றோலிய அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுவதற்கான உரிமை கெய்ர்ன் (20ஆம் பக்கம் பார்க்க)

# போர்க் குற்றங்களில் இருந்து இலங்கை அரசு தப்ப முடியாது!



### சுமந்திரன் எம்.பி நம்பிக்கை

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்ற போர்க் குற்றச்சாட்டுகள் இன்னமும் குற்றச்சாட்டுக்களாகத்தான் இருக்கின்றன. ஆனால் இவை விசாரிக்கப்பட வேண்டிய குற்றச்சாட்டுகள். ஆகையால் இதிலிருந்து அரசாங்கம் தப்பிவிட முடியாது. காலம் கடந்தாலும் அதற்கான நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தற்போது நடைபெறுகின்ற இந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நாம் தீர்வை காணவேண்டும். இதில் வெற்றி கிடைக்காவிட்டால் அதுவே சர்வதேச சமூகம் அரசாங்கத்திற்கு எதிராக அடுத்துச் செய்ய வேண்டிய செயற்பாடுகளுக்கான அடிப்படையாக அமையும்.

ஆகையால் இது ஒரு நீண்ட போராட்டமாக உருவெடுக்கலாம். ஏனெனில் பேச்சுவார்த்தையில் உடனடியாக ஒரு தீர்வு வரும் என்பது எல்லோரும் எதிர்பார்க்கக்கூடிய ஒரு காரியம் அல்ல. சில இடைக்காலத் தீர்வுகளைக் கூட நாம் ஏற்க வேண்டி வரலாம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். நோர்வே அரச பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்வதற்காக நோர்வேக்கு விஜயம் செய்துள்ள சுமந்திரன், (20ஆம் பக்கம் பார்க்க)

# எமக்குச் சாதகமான சர்வதேச சூழலை பயன்படுத்த ஒற்றுமையுடன் செயற்படுங்கள்

## பிரான்ஸில் செல்வம் அடைக்கலநாதன் அறைகூவல்



(பாரிஸ்)

**தமிழர் தரப்புக்கு சாதகமாகவுள்ள சர்வதேச சூழலை பயன்படுத்தி பெறுமதியான விளைவை ஈட்டிக்கொள்ள புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார்.**

பிரான்ஸ் தமிழர் நடுவத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிரான்ஸ் தமிழ்மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்துடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சுவார்த்தைகள் குறித்து இயல்பாக எழுகின்ற சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு செல்வம் அடைக்கலநாதன் விளக்கம் அளித்தார்.

தாயகத்தில் போரின் பின்னரான காலப் பகுதியில் தோன்றியிருக்கின்ற மிகமோசமான, கவலை தருகின்ற நிலைமைகள் குறித்து எடுத்துக் கூறிய செல்வம் அடைக்கலநாதன், இந்த அவல நிலையைப் போக்க புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகம் முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் மக்களின் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய பல வெற்றிகளின் ஆதாரமாய் இருந்த புலம்பெயர் தமிழ் சமூகத்தால், தற்போது தோன்றியிருக்கின்ற நெருக்கடி நிலைமைகளை போக்க நிச்சயமாக முடியும் என அவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னின்று பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி சர்வதேச அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் சென்றடையும் வண்ணம் ஏற்பாடுகள் மேற்கொள்ளச்செய்வது குறித்து இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

தமிழ் மக்களின் இலட்சியம் என்ற விடயத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகமும் தாயக மக்களும் ஒன்றிணைந்து செயற்படும் போது எதிர்பார்த்த இலக்கை எளிதில் அடைந்து விடலாம் என தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன் புலத்தில் தற்போது தோன்றியுள்ள முரண்பாடுகள், குழப்பங்கள் முற்றாக நீக்கப்பட்டு ஒற்றுமையான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் சர்வதேச சூழல் தமிழர் தரப்பிற்கு சாதகமாக இருப்பதை எடுத்துக் கூறிய அவர் தமிழர் தரப்பு பெறுமதியான விளைவை இதன் மூலம் ஈட்டிக்கொள்ள பாடுபட வேண்டும் எனவும் அதற்கு முதலில் ஒற்றுமை அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார். (ந-5)

# சரத் பொன்சேகாவிற்கு ஆதரவான படையினர் மீது அரசு அடக்குமுறை

## விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக செயற்பட்ட படை அதிகாரிகள் மீது அரசாங்கம் அடக்குமுறைகளை பிரயோகித்ததாக அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்னீஸ் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தூதுவருக்கும் அந் நாட்டு இராஜாங்கத்திணைக்களத்திற்கும் இடையிலான தொடர்பாடலின் போது புட்னீஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 2010ஆம் ஆண்டுபெப்ரவரி மாதம் இந்தத் தகவல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் படைத்தரப்பின் முக்கிய பதவிகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், கட்டாய ஓய்வு என பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சரத்பொன்சேகவினால் நீண்டகாலமாக இடமாற்றம் வழங்கப்படாதவர்களுக்கு தேர்தல் சட்டங்களினாலும் சில மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் இருந்ததாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு ஆதரவளிக்காத மற்றும் தேர்தல் சட்டங்களை உரிய முறையில் முன்னெடுத்த 150 காவல்துறை உத்தியோகத்தர்கள் தேர்தலின் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாற்றங்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துமா என்பதனை உறுதியாகக் கூறமுடியாது என புட்னீஸ் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது. (ந-5)

# மர்மமான முறையில் இறந்த முதியவர் திருநெல்வேலியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிபகுதியில்மர்மமானமுறையில் இறந்து கிடந்த முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி வீதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கணபதி வேலுப்பிள்ளை (வயது-70) என இனங்காணப்பட்டுள்ளது.

இவர் திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் பாதணிகள் தைக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் தொழிலின் நிமித்தம் வீட்டை விட்டுச் சென்றவர் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு வீட்டை விட்டு வெளியேறும் போது கையில் தங்க மோர்திரம் ஒன்று அணிந்திருந்ததாகவும் 15 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொண்டு சென்றதாகவும் உறவினர்கள் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

முதியவர் பயணித்த துவிச்சக்கர வண்டியும் அதில் இரண்டு கைப்பையும் தொங்க விடப்பட்டிருந்தவாறு மீட்கப்பட்டுள்ளது.

பற்றைக் காணிக்குள் வீட்டின் மதில் கரையோரமாக முதியவர் ஒருவரின் சடலம் கிடப்பதாக அப்பகுதி மக்களினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அப்பகுதிக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்தோடு சடலத்தை யாழ். மாவட்ட நீதிபதி ஏ.பிறேம்சங்கர் நேரில் சென்று பார்வையிட்டதோடு பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இது தவிர முதியவரின் சடலத்தில் இரத்தக் கசிவுகள் காணப்படுவதோடு மோதிரமும், பணமும் திருடப்பட்டுள்ளதால் முதியவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (ந-6)

# வெளிநாட்டில் புகலிடம் கோரியோர் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் புகலிடம் கோரியுள்ள அதிக எண்ணிக்கையிலானவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

30 ஆண்டுகால யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் பல நாடுகள் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பிலான நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளன.

புகலிடம் வழங்குவதில் கடுமையான விதிகள் பின்பற்றப் படக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில காலமாக இலங்கையர்களுக்கு புகலிடம் வழங்குவது தொடர்பிலான விதிமுறைகளில் சில நாடுகள் மாற்றங்களை கொண்டு வந்துள்ளன.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் புகலிடம் வழங்க வேண்டிய அவசியமில்லை என பல நாடுகள் கருதுகின்றன.

கடந்த காலங்களில் புகலிடம் கோரிய பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் யுத்தத்தையே பிரதானமாகக் காட்டியிருந்தனர்.

பிரிட்டன், கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இவ்வாறு அடைக்கலம் கோரியுள்ளனர். (ந-5)


**வீடு விற்பனைக்கு**

சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியில் பெரிய கல் வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
T.P.:- 0754985939
0773502821

(6443)


# இந்திய மீனவர்களை அனுமதிக்க முடியாது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்க முடியாது என மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இருநாட்டு மீனவர்களும் பொதுவான கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதில் சிக்கல்கள் நிலவுவதாக அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை, இந்தியமீனவர்கள் பிரச்சினை தொடர்பில் அடுத்தவாரம் இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைநடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு நாட்டு மீனவர்களும் தத்தமது கடல் பிரதேசங்களில் மீன்பிடியில் ஈடுபட வேண்டுமே தவிர அத்துமீறல்களில் ஈடுபடுவது பொருத்தமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)


**தேவை**

சங்கானையில் இயங்கும் லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்புக்கு கிரபிக்ஸ் டிசைனர்ஸ் (பெண்கள் மட்டும்) தேவை.

**லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்**

சங்கானை (Bank of Ceylon அருகில்)

தொடர்பு :- 021 2250390

(6473)

# இன்று ஒரு தகவல்

## நரியின் தந்திரம்

ஓர் ஊரிலே காடு இருந்தது. அந்தக் காட்டில் சிங்கம் ஒன்று காட்டுத்தலைவனாக ஆட்சி புரிந்து வந்தது.

மற்றைய எல்லா விலங்குகளும் அந்தச் சிங்கத்தின் சொற்படி கேட்டு நடப்பது வழமை போல இருந்தது.

அந்தச் சிங்கத்தை எதிர்த்தும் பேசுகிற துணிச்சல் வேறு யாருக்கும் இல்லை. அந்தச் சிங்கத்திற்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம்.

நரித்தந்திரம் என்று சொல்லுகிறார்கள்... அது எப்படி இருக்கும்?

இதைக் கண்டுபிடிக்க என்ன செய்யலாம்? யோசனை செய்தது கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

அதன்படி-காட்டில் உள்ள எல்லா விலங்குகளையும் வரவழைத்து ஒரு கூட்டம் கூடியது. ஒரு பெரிய திடலில் எல்லா விலங்குகளும் உட்கார்ந்திருந்தது.

எதிரே உள்ள ஒரு மேடையில் சிங்கம் உட்கார்ந்திருந்து பேச நிகழ்த்த ஆரம்பித்தது.

“நண்பர்களே... இப்போது நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீங்கள் எல்லோரும் பதில் சொல்ல வேண்டும்!” அப்படி என்று கூறியது.

என்ன கேள்வி கேட்கப் போகிறாரோ தெரியவில்லையே என்ற பயம் எல்லா விலங்குகளுக்கும் ஏற்பட்டது. ஏதாவது பிழையாகப் பதிலளித்தால் சிங்கத்திற்கு கோபம் வந்து விடும். அதன் பின் என்ன நடக்குமென்று யாராலேயும் சொல்ல முடியாது. எல்லா விலங்குகளும் சிங்கம் தெரிவிக்கப்போவதை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது.

ஒரு சின்ன எலியைப் பிடித்தது... அதைத் தன்னுடைய உள்ளங்கையில் வைத்து உயர்த்திக் காட்டி “இது என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்?” என்றது.

முதலில் ஒரு காட்டுப் பூனை எழுந்து “இது எலி” என்று பதிலளித்தது.

அதன் பின் குரங்கு “இது எலி” என்று சொல்லிவிட்டுப் போய் உட்கார்ந்தது.

அதனைத் தொடர்ந்து ஒரு கரடி வந்து “இது எலி” என்றது.

கடைசியாக வந்த நரி மட்டும் கொஞ்சம் வித்தியாசமாகப் பதில் கூறியது.

“இது எலி” என்று சொல்லவில்லை.

“இதை... எலி என்று சொல்கிறார்கள்!” அப்படி என்றது. அதாவது நரி மனதினுள் என்ன நினைத்தது தெரியுமா?

இது எலி என்பது சிங்கத்திற்கு தெரியாமலா இருக்கும்? அப்படியிருக்கும் போது சிங்கம் எதற்காக இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறதோ... தெரியவில்லையே... இந்த வலைக்குள் நான் ஏன் மாட்டிக் கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் இப்படி சொல்கிறார்கள் என்று நான் சொல்லிவிட்டால் என்மேலே எந்தப் பிழையும் கண்டுபிடிக்க முடியாது... இதுதான் நரியின் யோசனை.

இருந்தாலும் அந்தச் சிங்கம் நரியை விட்டு வைப்பதாக இல்லை. மறுபடியும் அந்த நரியை அழைத்தது.

இதோ... பார் நரியே...இவ்வளவு நாளாக நீ எலியைப் பார்த்ததே இல்லையா? இது என்ன என்பது உனக்குத் தெரியாதா? நீ தெளிவாகச் சொல்லவேண்டியதுதானே “இது எலி” அப்படி என்று. அதை விட்டுட்டு ஏதோ ஜோதிடம் சொல்வது மாதிரி சொல்கிறாயே...

சரி உனக்கு ஒரு மாதகால அவகாசம் தருகிறேன்... நீ போய் உன் இனத்தை ஒன்று சேர்த்து மற்றைய நரிகளோடு கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வா... அதன்பின் வந்து சொல்லு இது என்ன பிராணி! என்பதை அவ்வளவு தான். கூட்டம் கலைந்தது.

நரி யோசனையோடு திரும்பிப் போனது... மற்றைய நரிகளிடம் பேசியது.

நாம் எல்லோரும் அது எலி என்று சொன்னால் என்ன ஆபத்து நேரிடுமோ தெரியவில்லையே.

ஒரு மாதம் கடந்த நிலையில் அடுத்த கட்டகூட்டம் நடந்தது.

சிங்கம் கேட்டது என்ன நரியே... என்ன முடிவு எடுத்துள்ளீர்.

ஐயா! நீங்கள் சொன்னதன் பிரகாரம் எல்லோரும் கூடி விவாதித்தோம்.

“சரி என்ன முடிவு?”

“இதை எலி என்று உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்” என்று தெளிவாகக் கூறியது.

அப்போதும் இது அதிலே தன்னைச் சம்பந்தப்படுத்தவில்லை!

சிங்கத்திற்குச் சிரிப்பு வந்தது.

அதன்பின் கேட்டது... சரி..அதையெல்லாம் விடு... நீ என்ன நினைக்கிறாய்? அதைச் சொல்லு? என்று கேட்டது.

“எஜமானே! நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ அப்படித்தான் நானும் நினைக்கிறேன்!” என்றது நரி.

“சரி போய் வா!” என்று கூறியது சிங்கம். இது தான் நரித் தந்திரம் என்பதாகும்.

இன்றைய உலகில் மனிதர்களுக்கு இந்தத் தந்திரம் அதிகமாகத் தேவைப்படுகிறது... அதுவும் அடிக்கடி தேவையாக வுள்ளது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்ட படைதலைமையகத்தின் ஏற்பாட்டில் மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் இவ் வருடம் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு நேற்று யாழ். சிவில் அலுவல்கள் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த 54 மாணவர்கள் பரிசில் வழங்கிக் கெரவிக்கப்பட்டனர்.

அத்தோடு கடந்த வருடம் க. பொ.த.(சா/த) பரீட்சையில் உயர்தர பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைந்த மாற்றுவலுவுடைய 4 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக வழங்கப்பட்டது.

இது தவிர யாழ்.மாவட்ட படைத்தரப்பினரால் நடாத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில்பிரதமவிரு ந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்து ருசிங்க கலந்து கொண்ட தோடு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வடமாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் உபசெயலாளர் வி.ரி. செல்வரட்ணம் விவசாய பீடாதிபதி திருமதி சிவச்சந்திரன், பேராசிரியர் மிகுந்தன் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (4-6)

# தென்னை பயிர்செய்கை நாற்று மேடை அலுவலக திறப்பு விழா

ஜெய்க்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அச்சுவேலி பழைய பட்டுப்பூச்சி நிலையத்தில் தென்னைப் பயிர்செய்கை நாற்று மேடை அலுவலகமும் பயிற்சி நிலையமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தென்னைப் பயிற்செய்கை பிராந்திய முகாமையாளர் வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தென்னை அபிவிருத்தி ஜெனத மக்கள் பெருந்தோட்ட அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான யப்பானிய தூதுவர் குனியோ டக்காசி, ஜெயக்கா நிறுவன பிரதிநிதி அகிராஷுமூரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். அத்தோடு ஜெய்கா நிறுவனத்தினால் தென்னை நாற்று மேடைக்கான தூவல் நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-12)

## ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் விண்ணப்பப்படிவங்கள் இன்று திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக அந்நிதியத்தின் யாழ்.பிராந்திய காரியாலயத்தின் பொறுப்பதிகாரி ஜெ.தமிழழகன் தெரிவித்துள்ளார்.

இந்தப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா எமது நிதியத்தினால் வழங்கவுள்ளது.மேலும் இம்முறை விண்ணப்பப்படிவங்கள் தமிழ் மொழியில் மட்டும் அச்சிடப்பட்டுள்ளது.எனவே, இவ்விண்ணப்பப்படிவங்களை இலக்கம் 70 மாட்டீன் வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (4-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 90 |
| தக்காளி | 50 | 90 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 30 | 80 | 50 |
| கரட் | 50 | 70 | 50 |
| பூசணி | 40 | 40 | 25 |
| புடோல் | 30 | 20 | 20 |
| வாழைக்காய் | 30 | 30 | 20 |
| சின்ன வெங்காயம் | 0 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 70 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 70 | 80 | 40 |
| லீக்ஸ் | 50 | 90 | 60 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 50 | 40 |
| முருங்கைக்காய் | 70 | 90 | 50 |
| போஞ்சி | -- | 160 | 90 |
| கத்தரிதம்புள்ள | 35 | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 230 | 200 | 210 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

## இராசி பலன்

*03.10.2011*
*(புரட்டாதி 16, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*சப்தமி பின்னிரவு 2.59 மணிவரை*
*கேட்டை முற்பகல் 9.44 மணிவரை*
*இராகுகாலம் 7.32-9.02 மணிவரை*
*சுபநேரம் 12.02-1.32 மணிவரை*

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொதுவாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் அகலும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தொழில் முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்தழைப்பு கிடைக்கும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், கணவன்-மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கடகம்** பகைவிலகி பாசம் கூடும் நாள், உடல் நலம் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும்,அயலவருடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், போசன சுகமண்டு.

**சிங்கம்** சிறப்பான நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், புதிய நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பூமியில் இலாப முண்டு.

**கன்னி** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், பொருட்சேர்க்கைக்கு இடமுண்டு, துரத்துச் சொந்தக்காரர்களால் நன்மையுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக நிலையுண்டு.

**துலாம்** பாராட்டும் புகழும் அதிகரிக்கும் . நாள், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடவீர்கள், பழைய கடன்கள் திடீரென வசூலிக்கலாம், சுவாரஸ்யமான நாள்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், பெரிய மனிதரின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.

**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், தொழில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வெளியூர் பயணமொன்று [illegible]வாகலாம், தெய்வ சிளந்தை [illegible]லோங்கும்.

**மகரம்** சுபவிரயம் ஏற்படும் நாள், உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிரயாணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** தனவரவு திருப்திகரமாக அமையும்,உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும், சமயோசிப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள்.

**மீனம்** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், எடுத்த முயற்சிகள் கைகூடும்,பிறர் உதவியுண்டு தொழில் நன்மையுண்டு, வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

வளவன்






யாழ்.மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் இவ்வருடம் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா நேற்று சிவில் அலுவல்கள் மற்றும் பொதுமக்கள் இராணுவ தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் ஆகியோர் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-அலுவலகச் செய்தியாளர்)

## நல்லூர்க் கோட்டத்தில் நடைபெற்ற வாய்ப்பாடு மனனப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வாய்ப்பாடு மனனப் போட்டி முடிவுகள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.எஸ். மாணிக்கராஜாவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

தரம்-03

ந.சபீனா ( கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை),யொ.பவராஜ் (யா/முத்துத்தம்பி வித்தி, ஆ.வித்தியாசாகர் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை),க.லக்ஷனன் (யா/ஆனைப்பந்தி மெ.மி), யொ.கிஷாா்த்தன் (யா/செட்டித் தெரு மெ.மி.) த.டிலக்சனா (யா/திருநெல்வேலி இ.த.க.), கி.சரண்யா (யா/இந்து மகளிர்), து.டக்சன் (யா/கல்வியங்காடு இ.த.க.பா), கி.கோபிகா(யா/வண்ணை ஸ்ரீவைத்தியலிங்கம்). இ.நர்மலா (யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தி

தரம்-04

பா.திலக்கா (யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ச.கோபிகா (யா/இந்து ஆரம்பப் பாடசாலை),ஜெ.திருமாறன் (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை),பூ.திலக்சிகா (யா/திருநெல்வேலி இ.த.க.), ஜெ.யதுசனா (யா/செட்டித்தெரு மெ.மி.) ஜெ.திவ்யா (யா/கல்வியங்காடு இ.த.க.பா),உ.நிதர்சன் (யா/வண்ணை வைத்திலிங்கம்), ரூ.பிருந்தா (யா/கொக்குவில் மேற்கு சி.சி ),ச.டிலக்சனா (யா/கோண்டாவில் இ.ம.வி), ர.டிலக்சனா (யா/நல்லூர் சென் பெனடிக்)

தரம்-05

து.வைஷ்ணவி கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ர.சுஜாஜினி (யா/கல்வியங்காடு இ.த .க.பா),ஜெ.அனோஜ் (யா/ஆனைப்பந்தி மெ.மி), இ.தட்சாயினி (யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தி),ச.சிவதர்சன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை),த.நிலானி (யா/திருநெல்வேலி இ.த.க.),இ.கோபிகா (யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), சி.விதுசன் (யா/செட்டித்தெரு மெ.மி.) ,க.சுடரோன் (யா/நல்லூர் சென் பெனடிக் றோ.க.), உ.தினுசாந் (யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.)

## வாசிப்பு மாதத்தையொட்டி கட்டுரை,சித்திரப்போட்டிகள்

(மருதங்கேணி)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச சபையினர் இப் பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகளிடையே கட்டுரைப் போட்டி, சித்திரப்போட்டி, வாசகர்களுக்கான பொது அறிவுப் போட்டிகள் என்பனவற்றை நடத்தவுள்ளனர்.

இதற்கமைய கட்டுரைப்போட்டிக்காக அதிசய பாதையில் வாசிப்பினால் ஒன்று சேர்வோம், வாசிப்பை வாழ்க்கையாக்குவோம், ஒரு நூலகத்தின் கதவு திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலையின் கதவு மூடப்படுகிறது, நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் வாசிப்பு பழக்கத்தில் ஏற்படுத்தும் தாக்கம் போன்ற தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன.

இப்போட்டிக்குரிய நிபந்தனையாக கட்டுரைகள் அனைத்தும் 500 தொடக்கம் 550 சொற்களுக்கிடைப்பட்டதாக அமைய வேண்டும்.

அடுத்து சித்திரப் போட்டிக்காக புத்தகம் பேசுகிறது, டெங்கு ஒழிப்பிற்கான மாணவர்களின் பங்கு, வீட்டுக்கு ஒரு நூலகம், அறிவு கூடிய சமுதாயத்தை கட்டியெழுப்புவோம் போன்ற தலைப்புகள் தரப்பட்டுள்ளன.

இப்போட்டிக்குரிய நிபந்தனையாக தாள் ஏ3 அளவுடையதாக இருப்பதோடு நீர்ச்சாயம், எண்ணெய்ச்சாயம் போன்ற வர்ணங்களையே உபயோகிக்க வேண்டும்.

எனவே இப்போட்டிகளுக்கான ஆக்கங்களை பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் புலோலியில் அமைந்துள்ள மத்திய நூலக நூலகரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-12-35)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு

## மக்கள் வங்கியினால் விசேட பரிசுத் திட்டங்கள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியில் 2 ஆயிரத்து 500 ரூபாவிற்கு மேல் வைப்பிலிருப்பவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முதலாம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை மக்கள் வங்கியில் இசுறு உதான, சிசு உதான கணக்குகளை வைத்திருக்கும் சிறுவர்களுக்கு மீண்டும் ஒருமுறை விசேட பரிசில்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு மாதங்களுக்கும் 5 வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்கு வங்கிக் கணக்கை ஆரம்பித்திருப்பவர்களுக்கும் புதிதாக ஆரம்பிக்கும் இசுறு உதான கணக்கிற்கு 2 ஆயிரத்து 500 ரூபா வைப்பு செய்வதன் மூலம் உங்கள் சிறுவர்களின் கணக்கு விசேட சீட்டெழுப்பிற்கு தகுதி பெறுகிறது.

அத்தோடு 2 ஆயிரத்து 500 ரூபாவை இந்த இரண்டு மாதங்களிற்குள் இரண்டு தவணையாகவும் வைப்பிலிடவும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்படும் ஆயிரம் வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க சிறுவர்களுக்கான மூன்று சக்கர துவிச்சக்கர வண்டிகள் பரிசாக வழங்கப்படவுள்ளது.

அத்தோடு இந்தக் காலப்பகுதிக்குள் சிசு உதான கணக்கில் 2 ஆயிரத்து 500 ரூபாவை வைப்பு செய்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உயர்கல்வி புலமைப் பரிசில் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

## நேரடி ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் ஆடிப்பூ மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா தொகுப்பு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நேத்திரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளத்ாக சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (4-12)

## நவராத்திரி விழா சிறப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாவலர் மணி மண்டபத்தில் தினந்தோறும் பிற்பகல் 3.30 மணி முதல் 5.30 மணிவரை நவராத்திரி விழா நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை சக்தி விர்தங்கள் எனும் தொனிப்பொருளில் க.ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதில் சங்கரத்தை முருகமூர்த்தி கோயில் அறநெறிப் பாடசாலை, ஏழாலை ஆத்ம ஜோதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

அத்தோடு நாளை செவ்வாய்க்கிழமை சைவ வாழ்வியலில் சக்தி வழிபாடு எனும் தொனிப் பொருளில் சைவப் புலவர் கு.சுமுகலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதில் வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை,துணவி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (4-12)




## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

கோகுலம் அறநெறிப் பாடசாலை, கோமாதா அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலைமகள் விழாவும் சான்றிதழ் வழங்கலும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அராலி அகாயக்குளம் விநாயகர் ஆலயத்தில் அறங்காவலரும் முன்னாள் அதிபருமான சிவத்திரு.சு.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று தொடந்து நூலகத்திற்கான நூல்கள் அன்பளிப்பு என்பனவும் இடம்பெறும்.(4-12)

## கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார மூன்றாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாண்ம்)

கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வாரம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கைதடி சாந்தி நிலையத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இல்ல அத்தியட்சகர் நா.இராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் எஸ்.அச்சுதன், சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி திணைக்கள கணக்காளர் சி.குகபாலன், முன்னாள் அத்தியட்சகர் கே.வி.சிவநேசன், கைதடி தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் செ.பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் உள்ளூராட்சித் திணைக்கள அலுவலர்கள் முதியோர்களுடனான கலந்துரையாடல் மற்றும் முதியவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், மந்திகை சத்தியசாயி நிலையத்தாரின் பஜனை என்பனவும் இடம்பெறும். (4-12)

# புதுக்குடியிருப்பு கோட்டத்தின் மனனப் போட்டி முடிபுகள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே ஆரம்பக்கல்விப் போட்டிகளான திருக்குறள் மனனப்போட்டி, வாய்ப்பாடு மனனப்போட்டி, துரித கணிதப் போட்டி, சிறுவர் நாடகம் போன்ற போட்டிகள் அண்மையில் நடைபெற்றது.

இதில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரங்கள் புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**திருக்குறள் மனனப்போட்டி**

தரம்-01

தீ.திவாகரன் (மு/விசுவமடு ம.வி), வ. கிருஷ்ணா (மு/விக்னேஸ்வரா வித்தி),ச.சாலினி (மு/நெத்தலியாறு த.வி)

தரம்-02

பி.வினிதன் (மு/நெத்தலியாறு த.வி), சி. நிலக்ஷி (மு/விக்னேஸ்வரா வித்தி), ச.யாழிசை (மு/தேவிபுரம் அ.த.க)

தரம்-03

ஜெ.பவித்திரன் (மு/சுப்பிரமணிய வித்தியாலயம்), அ.டோமினுஷா (மு/விக்னேஸ்வரா வித்தி), கு.ஜெனனி (மு/நெத்தலியாறு த.வித்தி

தரம் -04

ரா.அருள்விழி (மு/உடையார்கட்டு ம.வி), அ.சிபோசன் (மு/விக்னேஸ்வரா வித்தி), அ. சரவண்யா (மு/விசுவமடு ம.வி)

தரம்-05

கு.இசைநிலா (மு/நெத்தலியாறு த.வி), ந.டென்சினா (மு/தேராவில் த.வி), சி.சிறீரூபன் (மு/சுதந்திரபுரம் அ.த.க.பா)

**வாய்ப்பாடு மனனப்போட்டி**

தரம்-03

சி.ஜீவகன் (மு/நெத்தலியாறு த.வி),இ. நிருத்திகா (மு/விக்னேஸ்வரா வித்தி), க.டிலக்சிகா (மு/விசுவமடு ம.வி)

தரம்-04

கு.அபிநயன்(மு/விக்னேஸ்வரா வித்தி, து.திலக்ஷன்(மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி , பு.ஒபேத் (மு/நெத்தலியாறு த.வி.), நா.திலக்சனா(மு/உடையார்கட்டு ம.வி.)

தரம்-05

பு.பார்த்தீபன்(மு/நெத்தலியாறு த.வி.), ஷ.திஷானி(மு/பாரதி வித்தியாலயம்), ஏ.டிருஷன்(மு/விசுவமடு ம.வி.)

**துரித கணிதப் போட்டி**

தரம்-02

பி.வினிதன்(மு/நெத்தலியாறு த.வி.), ஜீ. சஜீவனா(மு/வள்ளிபுனம் க. உ. வித்தி), கெ. ஆதித்தியா (மு/விசுவமடு ம.வி.)

தரம்-03

க.மகிந்தன்(மு/நெத்தலியாறு த.வி), ஞா. சஞ்சீபன்(மு/தேராவில் த.வி.), வி.சனுராஜ் (மு/வள்ளிபுனம் க.உ.வித்தி

தரம்-04

நா.தேனுகா(மு/நெத்தலியாறு த.வி.), ச. கயல்விழி(மு/தேராவில் த.வி),து.திலக்சன்(மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி

தரம்-05

ப.சேதுராகவன் (மு/நெத்தலியாறு த.வி.), பி.பிரணவி (மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி), ஏ. டிருஷன் (மு/விசுவமடு ம.வி.)

**சிறுவர் நாடகப் போட்டி**

குழு

(மு/நெத்தலியாறு த.வி.),(மு/வள்ளிபுனம் க.உ.வித்தி),(மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி).

(4-12)

# கொழும்பில் மாடிவீடமைப்புத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்க தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பு நகரத்தில் 12 மாடி வீடுகளைக் கொண்ட புதிய வீடமைப்பு திட்டத்தின் நிர்மாணப்பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. வீடமைப்புத்திட்டத்தில் அனைத்து வீடுகளுக்கும் தேவையான வசதிகளை கொண்டதாக இந்த திட்டம் அமையவுள்ளது.

மாடி வீட்டுத்திட்டதின் கீழ் கொழும்பு நகரத்தில் 10 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளதென தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜயந்த சமரவீர இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.கொழும்பை அழகான, சுத்தமான நகரமாக தரமுயர்த்தும் நோக்கில் தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நிவாரண விலையில் வாடகை அடிப்படையில் வீடுகளை வழங்குவதற்கான திட்டமும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக தேசிய வீடமைப்பு ஆணையாளர் சட்டத்தரணி ராஜா குணரட்ண கருத்துதெரிவிக்கையில், கொழும்பு நகரில் காணி உரிமையாளர்களுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வர்த்தக நகரமாக கொழும்பு நகரை அபிவிருத்தி செய்வதற்கும் பத்தரமுல்லவை கொழும்பு நகரமாக மாற்றுவதற்கும் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதென்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் ஜானக திருக்குலசூரிய தெரிவித்தார்.

(4-12)

# நுண்கலைத்துறையில் யாழ்.மக்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்

## இந்தியத் துணைத்தலைவர் வி.மகாலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நுண்கலைத்துறையில் யாழ். மாவட்ட மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என இந்தியத் துணைத்தலைவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலாசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் வாழும் மக்கள் கலைகளில் மிகுந்த ஆர்வம் காட்டுவதோடு பெரும்பான்மையானவர்கள் அவற்றை நன்கு அறிந்து வைத்துள்ளனர். இந்தியத்துணைத் தூதரகத்தினால் யாழ். மாவட்டத்தில் பல நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அதில் நுண் கலைத்துறைக்கே இங்குள்ள மக்கள் அதிக ஆர்வம் காட்டினார்கள். எதிர்வரும் காலத்தில் அத்துறை சார்ந்த நிகழ்வுகளை நடத்தவே நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

அத்தோடு இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்பட்டு கலைஞர்கள் கௌரவிக்கப்படுவது வரவேற்கத்தக்க விடயம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(4-6)




# வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

பொலிகண்டி மீன் சந்தையிலிருந்து வல்வெட்டித்துறை செல்லும் வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இவ்வீதி பலவருடமாக குன்றும் குழியுமாக சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் இதனால் போக்குவரத்தின் போது விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (12-24)

# யாழ். மாவட்டத்தின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள்

**யா/ நாகர்கோவில் மகா வித்தியாலயம்**

இ.நிதுஜா-168, அ.அனிற்ரா-146, க. கரன்ராஜ்- 105.

**யா/கொடிகாமம் போக்கட்டி ரோ.க. த.க. பாடசாலை**

சி.இளங்குமரன்-154

**யா/ நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம்**

இ.மதிஸ்ரா- 162

**யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்**

சி.டிலக்ஷனா -170, க.சுபாங்கி-165, ச.நிதுர்ஷன்-160, கி.தனுரதன்-152

**யா/ கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை**

இ.ஆர்த்திகன் -169.

**யா/கல்வியங்காடு இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை**

ஜெ.கரீசன்-178, ர.சுகாஜினி-176, சு.துஸிகரணி-172, லி.மதுர்ஷன்-167, ந.தர்சினி-165, சு.அபிராமி-163, ஜெ.காயத்திரி-162.

# தூக்குத்தண்டனை என்பது திட்டமிட்டு கொலை செய்வதற்கு சமமானது

## வைகோ தெரிவிப்பு

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூன்று தமிழர்களின் உயிர்கள் காக்கப் படவேண்டும். மரணதண்டனையை முற்றாக ஒளிக்கவேண்டும் என்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்று சென்னையில் காயிதே மில்லக் கல்லூரி அருகில் பழநெடுமாறன் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து பேசிய ம.தி.மு. பொதுச்செயலாளர் வைகோ,

தமிழகத்தில் மரண்தண்டனையை முற்றாக ஒழிக்கவும் மூன்று தமிழர்களின் தூக்குத்தண்டனையை தடுத்து நிறுத்தவும் இன்று அன்னல் காந்தியடிகளின் பிறந்தநாளில் உண்ணாவிரத அறப்போராட்டம் அண்ணன் நெடுமாறன் தலைமையில் நடைபெறுகிறது.

137 நாடுகளில் தூக்குத்தண்டனை தடை செய்யப்பட்டுள்ளது.தூக்குத்தண்டனை என்பது திட்டமிட்டு கொலை செய்வதற்கு சமம் என்று முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் கிருஸ்ணய்யரே தெரிவித்துள்ளார்.பல்லுக்கு பல் கண்ணுக்கு கண் கூடாது என்று அண்ணல் காந்தியடிகள் சொல்லியுள்ளார். ஆகவே தூக்குத்தண்டனையை முற்றாக ஒழிக்க வேண்டும்.கடந்த ஓகஸ்ட் 30 அன்று தூக்கு தண்டனையை தடைசெய்ய வேண் டும் என்று சென்னை உயர்நீதிமன்றில் தீர்ப்பு வந்த நாளில் கட்சி பாகுபாடின்றி தமிழக மக்கள் அனைவரும் பெரும் திரளாக வந்திருந்தனர். எந்த அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. ஒரு குண்டூசி விழுந்தால் கூட சத்தம் கேட் டிருக்கும். அவ்வளவு அமைதியாக காத்திருந்தனர். ஆனால், இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் நடத்தாமல் வேறு மாநிலத்தில் நடத்த மனு செய்துள்ளார் கள். இதன் பின்னணியில் யார் இருக்கிறார் கள் என்று எனக்குத் தெரியும். நரேந்திர மோடிக்கு தீர்ப்பு வந்தபோது கூட பட்டாசு வெடித்து கோசம் எழுப்பி கொண்டாடினர். இது தவறு இல்லையா. ஒரு உயிருக்காக பல்லாயிரம் உயிர்களை கொன்று குவித் தீர்களே அதற்கு என்ன பதில். இந்த மூன்று தமிழர்களுக்கு அந்த சம்பவத்தில் சம்பந் தமே கிடையாது என்று நாங்கள் உறுதியாக கூறு கிறோம்.

ஆனால் இந்த மூன்றுபேரையும் தூக்கில் போட்டே ஆகவேண்டும் என்று மத்திய அரசு முடிவுசெய்துவிட்டது.அப்படி நடந்தால் நாங்கள் தெருத்தெருவாகச்சென்று ராஜீவ் அரசு தமிழர்களுக்கு செய்த கொடுமைகளை மக்களிடம் எடுத்து சொல்வோம் என்பதை மத்திய அரசுக்கு எச்சரிக்கிறோம். தூக்கு கயிறை அறுத்தெறிவோம் என்பதில் எங்களுக்கு சந்தேகமில்லை.

தூக்குதண்டனையை இரத்து செய்தே தீரவேண்டும் என்றார். (4-2)

# வீட்டுத்திட்டம் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்துங்கள்!

## பிரதேச செயலாளர்களுக்கு யாழ். அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்டுவரும் வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் என தெரிவில் தம் மையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தினமும் முறைப் பாடு செய்து வருகின்றனர். எனவே தொடர்ந் தும் இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப் படுவதால் ஒரு பொதுவான முடிபுக்கு வருவ தன் மூலம் இந்த வேலைத்திட்டத்தினைக் கொண்டு நடத்துவதன் ஊடாக எதிர்காலத்தில் எந்த ஒரு முறைப்பாடுகளும் வராமல் பார்த் துக் கொள்ள முடியும் என யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்துள் ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற வீட்டுத்திட்ட உதவிகள் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருமானம் கூடுதலாகப் பெறுகின்றவர் களை இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரி வின் போது சேர்க்கப்பட்டுள்ளதாக பாதிக்கப் பட்ட மக்கள் முறையிட்டுள்ளனர். எனவே, இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்களை பொதுமக்களின் பார்வைக்காக வைக்க வேண் டும் எனவும் ஊடகங்கள் ஊடாகவும் வெளிப் படுத்த வேண்டும் எனவும் நாம் வலியுறுத் தியிருந்தோம்.

இந்த நடவடிக்கைகளின் பின் ஆயிரத் திற்கும் அதிகமான முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. இதற்குக் காரணம் பயனா ளிகள் தெரிவுகளில் ஈடுபட்டவர்கள் தவறவிட் டுள்ளதே காரணமாகும். பிரதேச செயலாளர் களாக நியமிக்கப்பட்டவர்கள் தவறு செய்துள்ளனர். இது தொடர்பாக பாதிக்கப் பட்டவர்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசாங்கத்தினுடைய சட்ட நடைமு றைகளினைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுதான் நாம் சேவை செய்ய வேண் டும். அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு எதிராக நாம் கடமையாற்ற முடியாது.

பிரதேச செயலாளர்களாகிய நீங்கள் சரி யான முறையில் இதனைக்கையாள வேண் டும். மக்களினுடைய அடிப்படைத் தேவை களை அடையாளங் கண்டு தீர்க்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு இருக் கின்றது.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி செயலர் குழுவினரும் பாதுகாப்புத் தரப்பின ரும் பிரதேச செயலகத்தினரும் பிரதேச செய லர்கள் இவர்கள் உங்களுக்கே முழுமை யான அதிகாரங்களை வழங்கியுள்ளன.

நீங்கள் மக்களுக்கு சரியான சேவை களை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தான் இருக்கின்றனர். நீங்கள் மக்களுக்கு சரியான சேவைகளை வழங்க வேண்டும்.

எனவே, அரச சார்பற்ற தொண்டு நிறுவ னங்கள் பயனாளிகளைத் தெரிவு செய்வதை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. நீங்களே பயனாளிகளைத் தெரிவு செய்ய வேண்டும். உங்களுடைய உரிமையை நீங்கள் ஒரு போதும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

சுனாமியின் போது சகலரும் பாதிக்கப் பட்டவர்கள் என்ற நிலையில் அரசாங்க ஊழி யர்களுக்கும் சகல உதவிகளும் வழங்கப் பட்டன. இதனைக் காரணம் காட்டிக் கொண்டு சில பகுதி அரசாங்க ஊழியர்கள் தமக்கும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைக்கின் றனர்.

இந்த நிலையில் நாம் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். 60 ஆயிரம் மக்கள் வாழவழியின்றி இங்கு அல்லற்படுகின்றனர். இவர்களில் 27 ஆயிரம் பேருக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதற்கமைய உலக வங்கியின் திட்டத்தின் கீழ் 13 ஆயிரத்து 350 வீடுகளை அமைக்கத் திட்டமிட்டு அதை நடைமுறைப்படுத்தி வரு கின்றோம். இன்னமும் இத்திட்டத்தின் கீழ் 2 ஆயிரம் வீடுகள் மட்டுமே அமைக்கப்பட வேண்டியுள்ளது.

இதேபோன்று இன்னும் சில நிறுவனங் களும் இந்த வீட்டுத் திட்டங்களை யாழ். மாவட் டத்திலே நடைமுறைப்படுத்தி வருகின்றன. தற்பொழுது இந்திய வீட்டுத் திட்டமும் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய தற்பொழுது யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் அனும தியுடன் சுமார் 25 ஆயிரம் குடும்பத்தினர் யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள் ளனர்.

இதேபோன்று நீண்ட காலமாக அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த தெல்லிப்பளை வலிகாமம் பகுதிகளில் கணிசமான மக்களை மீள்குடியமர்த்தியுள்ளோம். யாழ்ப்பாண மக் களை பொறுத்தவரையில் மீள்குடியமர்த்தப் படுவோருக்கு வீடு, மலசல கூடம், கிணறு என்பன கிடைக்க வேண்டும் என்ற உணர்வு ரீதியான பிரச்சினைகளும் உள்ளன.

அரசாங்க ஊழியர்கள் அனைவரும் 4 வீதமான கடனுக்கு 25 இலட்சம் ரூபா வரை யில் வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள் ளக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசாங்க ஊழியர்கள், நிரந்தர வருமானம் பெறுவோர் ஐரோப்பிய, ஐக்கிய இராட்சியங்களில் குடும்ப உறுப்பினர்கள் இருக்கின்ற குடும்பத்தினர் போன்ற வசதி யானவர்களை தவிர்த்துக் கொள்ள வேண் டும்.

ஆனால், தற்பொழுது சமர்ப்பித்துள்ள உங்களுடைய பட்டியலில் இப்படியானவர்க ளின் பெயர் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள் ளன.

இது இந்திய, இலங்கை அரசாங்கங்களு க்கு இடையேயான ஒரு பிரச்சினையாகும். இதில் தவறுகள் நடைபெறும் என்ற சந்தேகம் நான் ஜெனீவா சென்றபொழுது அங்குள்ள தமிழ் மக்களால் வெளியிடப்பட்டது. ஆனால், நான் அவர்களுக்கு சரியான முறையில் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்ற டையும் என உறுதியளித்துள்ளேன்.

பாதிக்கப்பட்ட, வருமானம் குறைவான குடும்பத்தினர்களைத் தெரிவு செய்து இத னை வழங்க வேண்டும். இந்தப் பயனாளி கள் தெரிவின் பொழுது கிராம சேவையாளர் கள் சிலர் தவறுகளை செய்துள்ளனர். வரு மானம் கூடிய வசதியானவர்களைத் தெரிவு செய்துள்ளனர். கிராம சேவையாளர்களை விடுத்து நீங்களே இந்த வறியவர்களுக்கு வீடுகள் சென்றடைவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்றார். (4-6)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு வர்த்தக நடவடிக்கைகள் அவசியமாகின்றன

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் பொருளாதார வளர்ச் சியை நிலை நிறுத்துவதற்கும் வர்த்தக நடவ டிக்கைகளை மேம்படுத்துவதற்கும் தமிழ் மக்களுடனான அரசியல் நல்லிணக்கத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென அமெ ரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற் றுகையிலேயே அமெரிக்க தூதுவர் பற்றீ சியா புட்டினீஸ் மேற்கண்டவாறு கூறினார்.

மூன்று தசாப்த போர் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்களாகியும் இலங்கையால் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரச் செய்ய முடியாமல் இருப்பதாகவும் இலங் கையைப் பற்றி சர்வதேச முதலீட்டாளர் அறி ந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அருகி உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

நட்புரிமை பாராட்டும் வர்த்தக நடவடிக் கைகளை உத்வேகப்படுத்துவதில் அரசாங் கம் காலதாமதப்படுத்தி வருவதாகவும் அவர் காரணம் கற்பித்தார்.

அதேவேளை பிராந்தியத்தில் உள்ள அயல் நாடுகள் உலக வங்கியால் மேற் கொள்ளப்பட்ட வருடாந்த தரப்படுத்தலில் சிறந்த நிலையில் இருப்பதாகவும் அந்த நாடுகள் பொருளாதார வருவாயைக் பெற்றுத் தரும் நாடுகளுடனேயே முதலீடுகளை மேற் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித் தார். (4-2)

# இலங்கையிலிருந்து ஹஜ் கடமைக்கு செல்பவர்களின் எண்ணிக்கை குறைப்பு

(கொழும்பு)

இந்த வருடம் இலங்கையில் இருந்து ஹஜ் கடமைகளுக்காக செல்பவர்களின் எண்ணிக்கையினை சவுதி அரேபிய அர சாங்கம் குறைத்துள்ளதாக முஸ்லிம் கலா சார விவகார திணைக்களத்தின் இயக்குநர் வை. எல். எம்.நவவி தெரிவித்துள்ளார்.


இதனடிப்படையில் ஹஜ் கடமைக்கு செல் பவர்களை தெரிவு செய்வதில் பெரும் சிர மம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஹஜ் புனித கடமைக்காக முதல் முதலாக செல்பவர்களின் விண்ணப்பங்களுக்கு முன் னுரிமை வழங்கப்படும் என குறிப்பிடப்பட் டுள்ளது.

இது தவிர ஒவ்வொரு ஹஜ் யாத்திரிகர்க ளிடமிருந்து மூன்று இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவிற்கு மேல் அறவிடக்கூடாது என பிர யாண முகவர்களுக்கு திணைக்களம் வலி யுறுத்தியுள்ளது.

முகவர்கள் இந்த நிர்ணயிக்கப்பட்ட தொகை க்கு மேலாக அறவிடும் பட்சத்தில் முஸ்லிம் கலாசார விவகார அமைச்சுக்கு விண்ணப்பி க்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள் ளது.

அவர்களின் விண்ணப்பத்துடன் ஹஜ் யாத்திரையை மேற்கொள்பவர்கள் மேலதி கமாக வழங்கும் தமது விருப்பு கடிதத்தையும் இணைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4-2)



மு/மாங்குளம் மகா வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட துணுக்காய் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஜெயபாலன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவத் தலைவர் கே. அகிலனுக்கு பிரதம விருந்தினர் சின்னம் சூட்டுவதையும் மாணவ தலைவர்கள் உறுதியுரை எடுப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# நல்லினக்க ஆணைக்குழு தனது கடமையை சரிவரச் செய்யுமா என்பது சந்தேகமே?

## பிரி.நிழல் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் அலெக்ஸாண்டர் தெரிவிப்பு

**சர்வதேச பங்களிப்புடன் கூட இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழு தனது கடமையைச் சரிவரச் செய்யுமா என்பதில் எனக்கும் எனது முன்வரிசை சக உறுப்பினர்களுக்கும் நம்பிக்கை இல்லை. எனினும் சர்வதேச விசாரணை அவசியம் தேவை என பிரித்தானியாவின் நிழல் வெளியுறவுத்துறை அமைச்சராக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் அலெக்ஸாண்டர் இலங்கையில் போர்க்குற்றம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபை நம்பகத் தன்மையுடன் செயற்படவில்லை.

மேலும் இச் சபை இதற்கும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை என்பதை அறிந்து ஏமாற்றம் அடைந்துள்ளேன்.

2009 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியாக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 28 ஆம் திகதியன்று தொழில்கட்சிக்கான தமிழர்களின் மாநாடு நடத்தப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த டக்ளஸ் அலெக்ஸாண்டர் இலங்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பா விசாரணைகளை நடத்தி வருவதாக கூறப்படும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் சுதந்திரமாகவும் சாட்சி பாதுகாப்புக்காகவும் இடம்பெறவேண்டுமானால் அது சர்வதேச ஆணைக்குழுவின் முன்னால் இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் தலையிடுவதாக அது அமையாது.

எனினும் இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு தமது பணிகளை சர்வதேச ஆணைக்குழுவின் பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றே தாம் வலியுறுத்துவதாக டக்ளஸ் அலெக்சாண்டர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் 50 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டமை தொடர்பில் கருத்துரைத்த அவர் குறித்த 50 பேரும் இலங்கையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்பதற்கான உறுதியை பிரித்தானிய அரசாங்கம் பெற்றுக் கொள்ளவேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ந்தும் ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இடம்பெயர்ந்தோரை உரிய முறையில் இன்னும் இலங்கை அரசாங்கம் குடியமர்த்தவில்லை. பிரித்தானியாவில் இயங்கும் சிறந்த ஊடகத்துறைகாரணமாகசனல்4காணொளி மூலம் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான தகவல்கள் வெளிக்கொண்டு வரப்பட்டன.

இந்நிலையில் பிரித்தானிய அரசாங்கம் இலங்கையில் வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படவும் சமாதானம் ஏற்படுத்தப்படவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (4-2)

# கிளிநொச்சி மற்றும் திருக்கோயில் பகுதிகளில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

கிளிநொச்சி, திருக்கோவில் மற்றும் மஹஓய ஆகிய பிரதேசங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் சில அந்தந்தப் பகுதிபொலிஸாரால்மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி சிவநகர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மயானப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாகி, 30 ரவைகள் என்பவற்றை கிளிநொச்சி பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலும் திருக்கோவில் பாவட்டகுளம் பகுதி விவசாய நிலமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆர்.பி.ஜி. குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை, மஹஓய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இம் புல்கொடயாகலப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அந்தந்த பிரதேச பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-2)

# ஸ்கொட்லண்ட் யாட் பொலிஸாரால் 26 இலங்கைப் பொலிஸாருக்கு பயிற்சி

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸாருக்குப் பிரித்தானிய ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரால் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரால் பயிற்சியளிக்கப்பட்ட 26 இலங்கைப் பொலிஸாரும் தமது பயிற்சியைப் பூரணப்படுத்திய நிலையில் கடந்த 31 ஆம் திகதி வெளியேறினார்.

இது தொடர்பான வைபவம் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீ கலந்து கொண்டார்.

குறிப்பிட்ட 26 இலங்கைப் பொலிஸாருக்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனைவரும் நாட்டின் ஒன்பது மாகாணங்களில் முதற்கட்டமாக சேவையிலீடுபடுத்தப்படுவர் எனவும் பொலிஸ்மா அதிபர் இந்த வைபவத்தின் போது தெரிவித்திருந்தார். (4-2)

# சிறுவர்கள் மனநல பாதிப்புக்கு உள்ளாகும் தன்மை அதிகரிப்பு

## அங்கொடை தேசிய மனநல நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர்கள் மனநலப் பாதிப்புகளுக்கு இலக்காகும் தன்மை அதிகரித்துச் சென்றுள்ளதாக அங்கொடை தேசிய மனநல சுகாதார ஆய்வு நிறுவனம் தெரிவிக்கிறது.

குடும்பத் தகராறுகள்,கல்வி மற்றும் சமூகப் பிரச்சினைகளே இந்த நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளதென அந்த நிறுவனத்தின் பணிப்பாளரும் விசேட மனநல வைத்திய நிபுணருமான ஜயன்மெண்டிஸ் குறிப்பிடுகிறார்.

பிள்ளைகளிடையே மன அழுத்தம் பரந்தளவில் காணப்படுவதாகவும் விசேட மனநல வைத்திய நிபுணர் குறிப்பிட்டார்.

பிள்ளைகளுக்கு சிறந்த இளம் பராயமும் பெற்றோரின் உரிய பராமரிப்பும் பிள்ளைகளின் மன அழுத்தங்களை இனங்கண்டு அவற்றுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதும் அவசியமான ஒரு விடயமாகும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

அத்துடன் இளம் வயதிலேயே பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற மன நல பாதிப்புக்களை அடையாளம் காண்பது மிக முக்கியமானதாகும் எனவும் அவர் குறிப்பிடுகிறார். (4-2)


## Wanted- Part time Teachers

St.John's College and Chundikuli Girls' College of Jaffna are seeking Part time Teachres who are passionate about working with orphan and needy children. The applicant will be a hard working and enthusiastic teaching professional with excellent subject knowledge, and a keen interest in encouraging and inspiring students to love learning and excel in the subject area.

Subjects: Mathematics, Science and Sinhala

Working time: After school and week-ends

If you think you can make a profound difference in the lives of the Internally Displaced Children then, please send your application to St.John's College by post or email on or before 8 th October, 2011.

The Principal,
St.John's College.
Main Street,
Jaffna.
Tel /Fax No:021222 2432
Email: stjohns@sltnet.lk

(C-4603)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்/இ.அ.த வித்தியாலயம் 2011 புலமை பரிசில் பரீட்சையில் சிவபாதம் சந்திரகலா தம்பதியரின் செல்வப்புதல்வி சயந்தினி 178 புள்ளிகளை பெற்று பாடசாலையில் அதிகூடிய புள்ளியைப் பெற்றுள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



பாராட்டுவோர்:- அப்பா சிவபாதம் (சிவம்), அம்மா சந்திரகலா, அக்கா சிவப்பிரியா, இதற்கு உதவிய தங்கை சாயித்தியா, அதிபர், ஆசிரியர்கள், அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார்.

அறிவாலயம் , கரணவாய் மேற்கு, கரவெட்டி.

(6476)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ச.சதுர்சிகன் (158) வி.கம்சாளினி (159) த.தகவுமதி (155) கே.ரிகழ்யா (151)

கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

2011 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக் குப் பெருமை தேடித்தந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம். அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர் திருமதி. அனுபாமினி தயாபரன் அவர்களையும் பல்வேறு வகையில் ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

6465

பாடசாலைச் சமூகம் கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

# சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் கிடைக்கும் தீர்வுத்திட்டமே இனப்பிரச்சினைக்கு தீர்வாகும்

## விநாயகமூர்த்தி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடனும் ஆலோசனையுடனும் எட்டப்படும் தீர்வு தான் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும். சர்வதேச சமூகத்தைப் புறம் தள்ளிவிட்டுத் தன்னிச்சையாக சொந்த மண்ணில் எடுக்கப்படும் தீர்வு சிங்கள மக்களையே திருப்திப்படுத்தும்.

எனவே இந்த நாட்டில் சமாதானமும் அமைதியும் ஏற்பட வேண்டுமானால் இனங்களுக்கிடையில் ஒற்றுமை பேணப்பட வேண்டுமானால் சர்வதேச சமூகத்தின் ஆலோசனையுடன், ஒத்துழைப்புடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி முன்வர வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஜனாதிபதி வெளியிட்டுள்ள கூற்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது கூறினார்.

கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66 ஆவது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி எமது நாட்டில் சமூகங்களுக்கிடையில் நிலவும் பிரச்சினைக்கு சர்வதேச ரீதியான பரிகாரம் நடைமுறைச் சாத்தியமற்றது. சொந்த மண்ணில் எடுக்க கூடிய தீர்வே நிலையானது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதியின் இக் கருத்து பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண எவரும் முன்வரவில்லை. இந்த நாட்டை மாறி மாறி ஆண்டு வந்த சிங்களத் தலைவர்கள் தமது பதவிக்காலத்தைத் தக்க வைப்பதற்காக காலம் கடத்தி வந்தார்கள். சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், மகாநாடுகள் எல்லாம் ஏமாற்றத்தையே கொடுத்தன. இதனால் இனப்பிரச்சினை நாளடைவில் உச்சக் கட்டத்தையே அடைந்தது.

யுத்தம் முடிவடைந்து இரு வருடங்களுக்கு மேலாகியும் தமிழ் மக்கள் சொந்த இடங்களில் நிம்மதியாக வாழமுடியவில்லை. யுத்தகாலத்தில் வாழ்ந்தது போல் இராணுவ வேலிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக மீள்குடியமர்த்தப்படவில்லை. பொதுமக்களின் வீடுகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதால் அவர்கள் வாடகை வீடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள். தற்பொழுது நிலவும் மர்மமனிதரின் நடமாட்டத்தினால் மக்கள் நிம்மதி இன்றிக் காணப்படுகிறார்கள்.

சர்வதேசத்தின் அழுத்தம் காரணத்தினால் தான் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் படிப்படியாக மீள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். அதேபோல் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களும் விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். சர்வதேசத்தின் தலையீடே இதற்குக் காரணமாகும். இந்திய அரசாங்கத்தின் தலையீட்டினால் தான் மாகாண சபை உருவாக்கப்பட்டது. தற்போது இராணுவத்தின் தலையீடு சிவில் நிர்வாகத்தில் இருப்பதினால் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே யுத்த காலத்திற்கு முன் தமிழ் மக்கள் வாழ்ந்தது போல் தொடர்ந்தும் வாழ வேண்டும். இனப்பிரச்சினைக்கு நிரந்தரதீர்வு காணப்பட வேண்டும். சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் தான் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

சொந்த மண்ணில் எடுக்கப்படும் தீர்வு தமிழ் மக்களுக்குப் பரிகாரமாகாது. எனவே ஜனாதிபதி இதய சுத்தியுடன் இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரும்பினால் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் தீர்வை முன்வைக்க வேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கும் பொருத்தமானதாகும் என்றார்.(4-2)

## நீர்வேலை சிரமதானப் பணி

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் சாமிப்புலம் கமக்கார அமைப்பைச் சேர்ந்த வண்ணார் குளத்தில் இருவார நீர்வேலை சிரமதானப் பணி இன்று காலை 9 மணிக்கு பூநகரி பிரதேச செயலாளர் கே.எஸ் வசந்தகுமார் தலைமையில் ஆரம்பமாகவுள்ளதாக பூநகரி கமநலசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இச்சிரமதானப்பணியில் பூநகரிப் பகுதி விவசாயிகளை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்தோடு உரமானியம் பெறுவதற்கான சிரமதானப் பணி வேலையாகவும் இவ்வேலை கருதப்படுமெனவும் அறியத்தரப்படுகின்றது.

(4-12-84)

# வாக்கு வங்கிக்காக போலியான குற்றச்சாட்டை முன்வைக்கிறது கனடா

## இலங்கைக்கு அதிருப்தி

(கொழும்பு)

கனடாவில் உள்ள தமிழர்களின் வாக்கு வங்கிக்காக இலங்கையுடனான இராஜதந்திர உறவை விலையாக கொடுக்கவும் கனடா தயாராகி விட்டதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நம்பகமான அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கனடா வலியுறுத்தி வருகிறது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் இலங்கை விவகாரத்தில் ஐ.நா.காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றம்சாட்டியிருந்தார்.

கொமன்வெல்த் தலைவர்கள் மாநாட்டிலும் இலங்கை விவகாரத்தை கனடா பிரச்சினையாக்கும் என்று கருதப்படுகிறது.

அத்துடன் கனேடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜோன் பயார்ட் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக கடுமையான விசனத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே அங்குள்ள தமிழர்களின் வாக்குகளுக்காக இலங்கையின் இராஜதந்திர உறவையும் இழக்க கனடா தயாராகி விட்டதாக இலங்கை குற்றம்சாட்டியுள்ளது.

கனடாவில் பெருமளவு தமிழர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளதால் அவர்களின் வாக்குகளைக் குறிவைத்தே கனேடிய அரசாங்கம் செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(4-2)

# நாட்டின் அசாதாரண நிலைமைகளை கட்டுப்படுத்த இராணுவம் தயார் நிலையில்



## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அசாதாரண நிலைமைகள் ஏற் படும் போது அதனைக் கட்டுப்படுத்த பொலிஸாரால் முடியாவிட்டால் இராணுவத்தினர் தலையிட்டு நீதியையும் சமாதானத்தையும் தோற்றுவித்து நாட்டின் பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவர் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். இதற்காக இராணுவத்தினர் எந்த வேளையும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கண்ணிவெடியகற்றும் பணிகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணியில் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# பொதுநலவாய நாடுகளிடம் அறிக்கை சமர்ப்பிக்க முடியாது

## உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பு மாநாட்டின் போது நகல் அறிக்கை சமர்ப்பிக்கப்படமாட்டாது என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மாதம் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டின் போது உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நகல் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை திட்டமிட்டவாறு எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும் என அறிவித்துள்ளது. (4-2)

## கொழும்பு மத்திய அஞ்சல்

# பரிமாற்ற பதிவு சேவையாளர்கள் சேவையிலிருந்து இடைவிலகல்

(கொழும்பு)

கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்ற பதிவு பிரிவு சேவையாளர்கள் நேற்று முன்தினம் நண்பகல் முதல் தமது சகல சேவைகளிலும் இருந்து இடை விலகியுள்ளனர்.

இந்த தகவலை அஞ்சல் தொழிற்சங்க ஒன்றிய ஊடகப் பேச்சாளர் எச்.ஏ.ஆர்.நிஹால் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முதல் இரவு நேர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பதிவு பிரிவு சேவையாளர்களை ஈடுபடுத்தப்படவுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக அஞ்சல் மா அதிபர் எம்.கே.பீ.திசாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

சேவையின் நிமிர்த்தம் இன்று முதல் மத்திய அஞ்சல் பரிமாற்ற பதிவு பிரிவு சேவையாளர்களை இரவு நேர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த தீர்மானித்ததாக தெரிவித்தார்.

(4-2)

# வீடமைப்பு திட்டங்களுக்காக 4 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

வீடமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நான்காயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிக்கிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்காக 228 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டிருந்ததாக அதிகாரசபையின் தலைவர் ஜயந்த சமரவீர கூறினார்.

இந்த வருடத்தினுள் நான்காயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதன் மூலம் வீடமைப்பு திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றமை தெளிவாவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாடுமுழுவதும் கடன் உதவிகளின் அடிப்படையில் வீடமைப்புத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக அதிகாரசபை மேலும் தெரிவிக்கிறது.

(4-2)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



ஆன்மீகம் ௫௦

திரு.கார்த்திகேயன் இங்கே இருக்கிறார். அவர் காவல் அதிகாரி என்பது முக்கியமில்லை. அவருடைய திறமையால், அவருடைய செயல்களினால் மாநில அரசிடமோ, மத்திய அரசிடமோ எங்கே வேண்டுமானாலும் சென்று அவரால் பேச முடியும். யோசனை சொல்ல முடியும். அவர் சொல்வதைக் கேட்கிற ஆட்கள் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள். இது போன்ற சூழ்நிலையில் நாம் வறுமனே எதிர்மறையாகப் பேசாமல் அந்த வேலை வேண்டும், இந்த வேலை வேண்டும் என்று கேட்காமல் உண்மையாக நாம் அடுத்த 3,4 வருடங்களில் என்னென்ன செய்தால் ஒவ்வொரு விவசாயியும் நன்மை அடையக்கூடும் என்று சரியாகத் தீர்மானிக்க வேண்டும். குறிப்பிட்ட 5 அல்லது 6 குறிக்கோள்களை வைத்துக் கொண்டு அதை அரசின் கொள்கைகளில் உட்படுத்தி நிறைவேற்ற வேண்டும். ஆனால், கொள்கை அமைப்பு, எல்லாவற்றையும் செய்துவிடாது. நாம் சந்தை வசதிகளை உருவாக்க வேண்டும். இதுதான் தற்போதைய நிதர்சன நிலை. எனவே ஆக்கபூர்வமான குறிப்பிடத்தக்க செயல் முறைத் திட்டங்களை நாம் வகுக்கலாம். தலைவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு விடயம், இப்போது இருக்கிற சூழ்நிலைக்கு எதிர்மறையாகப் பேச வேண்டாம். ஓர் அநியாயம் நடக்கிற தென்றால் அதற்கு எதிர்மறையாக இன்னொரு செயல் செய்தால் அது இன்னொரு அநியாயமாகிவிடும். பால் ஒரு லீற்றர் 7 ரூபாய் 50 சதம், தண்ணீர் ஒரு லீற்றா 13 ரூபாய் இது அநியாயம் தான். சரி, பால் விலையை 100 ரூபாயாக உயர்த்தினோம் என்றால் அது இன்னொரு வகையான அநியாயம்.

## ஒரு அநியாயத்தை எதிர்த்து இன்னொரு எதிர்மறையான செயலை செய்யும்போது அது மற்றுமொரு அநியாயமாகிவிடும்



நமக்கு வேண்டிய நன்மை என்ன என்பதை ஒரு தொலை நோக்குப் பார்வையோடு பார்க்க வேண்டும். இருக்கிற சூழ்நிலைக்கு எதிர்மறை வேண்டாம். அதனால், நன்மை வராது. ஏதோ ஓர் சூழ்நிலைக்கு மட்டுமல்ல. இன்னொருவருக்கு எதிர்மறையாகப் பேசும்போது பத்திரிகைகளில் வெளியிடுவார்கள். மிகவும் எளிதாக தலைவராகிவிடலாம். ஆனால், இது முக்கியமல்ல. நமது நன்மைக்கு என்னென்ன தேவை என்பதை ஒவ்வொன்றாகப்பாாத்து நாம் உருவாக்க வேண்டும். திரு.கார்த்திகேயன் போன்றோர் இருக்கும் போது நிச்சயமாக இதைச் சாதிக்க முடியும். நீங்கள் நூறு விடயங்கள் பேசலாம் அவற்றையெல்லம் அரசிடம் கொண்டு சென்று அதிகாரத்தில் இருப்பவர்களிடம் இவை சரியென்று புரிய வைத்து, குறிப்பிட்ட மாற்றம் கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பு நமக்கு இருக்கும் போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் இந்த வாய்ப்பை வெறுமனே பேசிப்பேசி வீணடித்து விடக்கூடாது. என்ன நடக்க வேண்டும்? தமிழ் நாட்டில் என்னென்ன மாற்றம் நடக்க வேண்டும்? எவை நடந்தால நம் வாழ்க்கை நன்றாக இருக்கும்? என்று நிர்ணயித்து குறிப்பிட்ட ஐந்து குறிக்கோள்களை மட்டும் தொடர்ந்து கவனித்துச் செய்யலாம். ஒரு வருடத்தில், இரண்டு வருடத்தில் அந்த நிலைக்கு வந்தால், அந்த 5 குறிக்கோள்கள் முழுமையாக பயன்படுவதற்கு இன்னும் 10 வருடங்கள் ஆகும். அரசின் கொள்கைகள் மாறிவிடும். புதிய சட்டங்கள் வரும். ஆனால், அவை நமக்குப் பயன் தர வேண்டுமே! பயன்தராாத கொள்கைகளை வைத்து என்ன செய்வது? 100 கொள்கைகள் சொல்கிறார்கள்.

நான் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரிடம் சென்று, ஏன் இந்த நிலமையில் இருக்கிறது என்று கேட்ட போது, அவர் உள்ளே அழைத்துப் போய் இருக்கிற திட்டங்களைக் காட்டினார். நான் அவற்றைப் படித்தேன். பத்து மணிநேரம் படித்தாலும் தீராது. சாதாரணமான திட்டங்கள் இல்லை. அற்புதமான திட்டங்கள். மிகவும் சிந்தித்துத்தான் திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டங்களை கிராமத்துக்குக் கொண்டு போவதற்கு அரசாங்கத்தில் யாரும் கிடையாது. இதற்கு மக்கள்தான் முன்வர வேண்டும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# இலண்டன் ஒட்டகம்

03

இங்கு அடிப்படைக் கேள்வியே, மொழி என்பது நம்மால் காப்பாற்றப்படுகின்றதா என்ன? அது அந்தந்தக் காலச் சூழலுக்கேற்ப தன்னைச் சிறிதே மாற்றிக் கொண்டு தன்னைத்தானே தக்கவைத்துக் கொள்கிறது என்பதுதானே உண்மை! இது உலகத்து எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். சாஸர் காலத்து ஆங்கிலம் ஷேக்ஸ்பியர் காலத்தில் இல்லை. ஷேக்ஸ்பியர் எழுதப்பயன்படுத்திய ஆங்கிலம் இன்று புழக்கத்தில் இல்லை. எல்லாம் மாறுதலுக்கு உள்ளாகித் தான் வந்துள்ளன. ஆனால், ஆங்கில வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது நம் மொழி ஏன் வளரவில்லை. என்கிற கேள்வி இங்கு எழும். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்ன 'மொழி உணர்வு' என்பதால் மட்டுமே நிச்சயமாக அல்ல. அந்த உணர்வின் பெயரால் மட்டும் நடத்தப்படும் மாநாடுகளாலும் அல்ல.

"சரியான அறிவியல் பார்வையோடு, உலக மொழிகள் பற்றி புரிதலோடு, பலபல துறைகளிலும் திட்டமிட்டுச் செயற்படுதலின் விளைவாகவே ஒரு மொழி வளர்ச்சியுறும்" என்கிறார், சமீபதத்தில் நடந்து முடிந்த செம்மொழி மாநாடு குறித்து, கல்கி இதழில் பிரசுரமான தனது விமர்சனக் கட்டுரையில், எழுத்தாளர் பிரபஞ்சன். ஒரு மொழியை வளர்ந்த மொழியென்று எப்போது கருதுவது? இக்கேள்விக்கு இதே கட்டுரையில் பிரபஞ்சன் சொல்வதைப் பாருங்கள்.

"உலகத்துத் தொழில்நுட்ப அறிவியல், அறிவுச்செல்வம் அனைத்தையும், உலகத் தத்துவங்கள், உலக வரலாறுகள், உலக இலக்கியங்கள், உலகக் கலை நுட்பங்கள் அனைத்தையும் தமிழ் மொழி மட்டுமே அறிந்த ஒருவர், தமிழ் மூலம் கற்று அறியக்கூடிய சாத்தியம் தமிழில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்ற நிலை, வந்தால் மட்டுமே தமிழ் வளர்ச்சியடைந்த மொழி என்று நான் கருதுவேன் என் இந்த கருதுகோளின்படி தமிழ் வளர்ந்த மொழி இல்லை என்பதே என் கருத்து. உலகத்தின் எந்த மூலையில் மனிதகுலத்தின் ஓரடி முன்னேற்றம். ஏற்பட்டாலும், அடுத்த நாளே அது என் மொழியின் இரத்தத்தோடு கலந்துவிட வேண்டும். உலகச் சமூகம் முன்னெடுத்து வைக்கும் பாதங்களின் பத்து விரல்களில் ஒரு விரல் நம்முடையயதாக இருக்க வேண்டும்."

பிரபஞ்சன் சொன்னவற்றோடு நம்மில் எத்தனைபேர் உடன்படுகிறோம்? இல்லையென்றால் நம்மில் எத்தகை பேர் இப்புரிதலை நோக்கி நகரவாவது தயாராக இருக்கறோம்?

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

தமிழில் முன்னரே உள்ள சிறப்புக்கள் அல்ல, பிரச்சினை இல்லாத சிறப்புகளே நாம் கவனத்திற் கொள்ள வேண்டியவை என்கிறார் பிரபஞ்சன்.

இங்கு சமீபத்தில் நான் படித்த ஒரு குட்டிக்கதை நினைவுக்கு வருகிறது.

தாய் ஒட்டகம் ஒன்றும், அதன் குட்டி ஒட்டகம் ஒன்றும் ஒரு மாலைப் பொழுதில் பச்சைத் தளிர்களை மேய்ந்தவாறு உலாத்திக் கொண்டிருந்தன. குட்டி ஒட்டகம் படு சுட்டி. ஓயாமல் வாய். சதா கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கும். அன்றைக்கும் அப்படித்தான்.

"அம்மா! ஏனம்மா நமக்கு மட்டும் முதுகில் திமில் எதற்கு இருக்கு?" தாய் எப்போதும் பொறுமையாகப் பதில் சொல்லும்.

"நாமெல்லாம் இயல்பாக பாலை வனத்தில் வாழ்பவர்கள் இல்லையா! பாலைவன்த்தில் தண்ணீர் பாலைவனச் சோலைகளில் மட்டும்தான் கிடைக்கும். தினந்தோறும் கிடைக்காது! கிடைக்கும் தண்ணீரை முடிந்த மட்டும் நம் உடம்பில் சேமித்து வைத்துக்கொண்டு, வேண்டும்போது உபயோகித்துக் கொண்டால் தண்ணீர் கிடையாத பாலை வனத்தில் பல நாள் சுற்றித் திரியவே, நமக்கு இயற்கை திமிலைக் கொடுத்திருக்கு" குட்டி திரும்பவும் கேட்டது. "அப்போ நமக்கு ஏன் கண் இமை கெட்டியாக இருக்கு? மூக்கை மூடிக்கொள்ள மூடி இருக்கு? மத்த மிருகங்களுக்கு அப்படி இல்லையே? அது ஏன்?"

தாய் ஒட்டகம் வாயை அசை போட்டுக் கொண்டு சொன்னது.

"பாலை வனத்தில் மணற் புயல் அடிக்கும்

அப்போது சட்டென்று ஒதுங்க இடம் கிடையாது கண்ணுக்கும் மூக்கிற்கும் பாதுகாப்பாக மூடி இல்லைன்னா கண்ணுலயும் மூக்கிலையும் மணல் போயிடும். அதனால் தான் நமக்கு இப்படி ஒரு மூடி இருக்கு."

குட்டி இப்போது அம்மாவின் கால் குளம்பைப் பார்த்துக் கேட்டது. "இவ்வளவு பெரிய குளம்பு நமக்கு எதற்கு?"

"அது கண்ணு,... மணல்ல நடக்கும்போது நம்ம கால் மணல்ல புதையாம நடக்கத்தான்" பொறுமையாகப் பதில் சொன்னது அம்மா ஒட்டகம்.

"பல்லும் நாக்கும் இவ்வளவு தடிப்பா கெட்டியா இருக்கே... அது ஏன்?" இது குட்டி யோசனையுடன் கேட்ட கேள்வி.

அம்மா ஒட்டகம் சொன்னது. "பாலை வனத்தில் செடி, கொடியெல்லாம் முரட்டுத்தனமாக இருக்கும். அதையெல்லாம் கடித்துச் சுவைத்துத் தின்ன வேண்டாமா?"

**யுகமாயினி சித்தன், தமிழ் நாடு**

இப்போது குட்டி பட்டென்று கேட்டது "இதையெல்லாம் வைத்துக் கொண்டு இந்தக் குளூர்ல லண்டன் மிருகக் காட்சிச் சாலையில் நாம் இரண்டு பேரும் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?"

நாமும் தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

(முற்றும்)

# ஓடி ஓடி செய்த பிரசாரங்கள் வழக்கு தாக்கல்களால் தவிடுபொடியாகின





ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.வுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராகவும் இரண்டு வழக்குகள் அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உரை தொடங்குவதற்கு முன்னர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக நியூயோர்க்கில் தெற்கு மாவட்டத்திலுள்ள மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் முதலாவது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

போரின் இறுதி நாட்களில் கொல்லப்பட்ட புலிகளின் கிழக்குத் தளபதி கேணல் ரமேஸின் மனைவி வத்சலாதேவி சார்பிலும்

## இவ்வழக்குகள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது

சுதந்திரபுரத்தில் படையினரின் ஆட்டிலறித் தாக்குதலில் கொல்லப்பட்டவரின் மகனான சீதாராம்சிவம் என்பவரின் சார்பிலும் இந்த வழக்குத் தாக்கல் தொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது வழக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் அமெரிக்கப் பல்கலைக்கழக வோஷிங்டன் சட்டக் கல்லூரி சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மனுதாரராகவும் வத்சலாதேவி ரமேஸ் தான் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு வழக்குகளுமே போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதை அடிப்படையாகக் கொண்டவைதான்.

அமெரிக்காவில் போர்க்குற்ற வழக்குப் பதிவு செய்ய சட்டத்தில் இடமில்லை என்பதால் குடியியல் வழக்குகளாக நட்டஈடு கோரி இவை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த வழக்குகளின் அடிப்படை நோக்கம் நட்டஈட்டை பெறுவதல்ல. போர்க்குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவே என்று கருதப்படுகின்றது.

இந்த வழக்குகளின் அடிப்படை நோக்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தனக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவதே என்று மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தலைவலியை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே இது அமைந்திருக்கின்றது.

ஏற்கனவே கடந்த ஆண்டு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிச் சென்றிருந்த போதும் போர்க்குற்ற வழக்கு பதிவாகும் நிலை உருவானதால் அவரசமாக நர்டு திரும்பும் நிலை அவருக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால் பிரித்தானியாவில் அவரது நிலைக்கும் அமெரிக்காவில் அவரது நிலைக்கும் வேறுபாடுகள் இருந்தன. பிரித்தானியாவுக்கு அவர் சென்றது தனிப்பட்ட பயணமாகவே.

அங்கு அரசுமுறைப் பாதுகாப்போ இராஜதந்திர சிறப்புரிமையோ அங்கு எதிர்பார்க்க முடியாத நிலை இருந்தது. அதைவிட அங்கு வெளிநாட்டில் நிகழ்ந்த போர்க்குற்றங்களுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்யும் வசதியும் இருந்தது.

ஆனால் அமெரிக்காவில் இவ்வாறபன போர்க்குற்ற வழக்கை தாக்கல் செய்யும் வாய்ப்பு இல்லை. அமெரிக்காவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளாது போனாலும் நியூயோர்க் நகரில் மட்டும் ஐ.நா.வின் இராஜதந்திரப் பாதுகாப்பு இருந்தது.

ஐ.நா.தலைமையகம் அங்கிருப்பதால் அங்கு வரும் தலைவர்களுக்கும் அங்குள்ள தூதுவர்களுக்கும் அத்தகைய இராஜதந்திரப் பாதுகாப்பு உள்ளது. நியூயோர்க் நகரிலுள்ள ஒரு வெளிநாட்டு இராஜதந்திரி மீது குற்றவியல் வழக்கைத் தாக்கல் செய்ய முடியாது.

அவரைக் கைது செய்யவோ தடுத்து வைத்து விசாரிக்கவோ முடியாது. அப்படிப்பட்ட நிலையில் ஒரு நாட்டின் ஜனாதிபதியை அவ்வளவு இலகுவாக பிடித்து உள்ளே போட்டு விட முடியாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கு நியூயோர்க்கில் இராஜதந்திரப் பாதுகாப்பு இருப்பதால் அவர் அதிகம் அலட்டிக் கொள்ளவோ அல்லது பயந்து ஓடவோ வேண்டிய நிலை இருக்கவில்லை. ஆனால் இந்த வழக்கு அவருக்கு ஒருவித தலையிடியைக் கொடுக்காமல் இருந்திருக்க வாய்ப்பில்லை.

இலங்கை அரசு பல்வேறு தூதுக்குழுக்களை அனுப்பியும் ஓடி ஓடி அலைந்தும் செய்த பிரசாரங்கள் அனைத்தையும் இந்த ஒரு வழக்கு சர்வதேச தலைவர்களின் கவனத்தை ஈர்த்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த வழக்குகளின் முக்கியமான அடிப்படை நோக்கங்களில் ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கடியைக் கொடுப்பது தான்.

ஏற்கனவே அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் தமது உறவினர்களைப் பறி கொடுத்த மூவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அதன் அழைப்பாணை ஏற்கனவே அலரி மாளிகைக்குப் போய் அங்குமிங்கும் அலைக்கப்பட்டு கடைசியில் நீதி அமைச்சின் செயலாளரினால் பொறுப்பேற்கப் பட்டுள்ளது.

அதற்கு பதில் இன்னமும் அளிக்கப்படவில்லை. பதில் அளிக்கின்ற திட்டமும் அரசாங்கத்துக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் இரண்டாவது நீதிமன்ற அழைப்பாணையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்கொண்டுள்ளார். இதற்கும் அவர் பதில் அளிக்கும் சாத்தியங்கள் குறித்து சந்தேகமாகவே உள்ளது.

இதற்கிடையே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான இதுபோன்ற வழக்கும் அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது. இந்த வழக்கை தான் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அதற்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்யையும் தேவையான உதவிகளையும் வழங்கும் என்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் கூறியுள்ளார்.

ஆனால் இன்னமும் இந்த வழக்கை எதிர்கொள்வது குறித்து அரசாங்கம் தீர்க்கமான முடிவுக்கு வரவில்லை. கலந்துரையாடல்கள் சட்டஆலோசனைகள் தொடர்கின்றன.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஐ.நாவுக்கான தூதரகத்தில் பணியாற்ற வேண்டியுள்ளது. அவருக்கு நியூயோர்க்கில் இராஜதந்திரப் பாதுகாப்பு உள்ளது.

அதனால் அழைப்பாணை அவரது தனிப்பட்ட வசிப்பிடத்துக்கே அனுப்பப்பட்டுள்ளது.

அவரது செயலகத்துக்கு அழைப்பாணை அனுப்ப முடியாது. அப்படி அனுப்பினாலும் அது செல்லுபடியாகமாட்டாது. இந்தச் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்தே அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.


நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. இராஜதந்திரி ஒருவருக்கு எதிராக குற்றவியல் வழக்குத் தான் தாக்கல் செய்ய முடியாதே தவிர அவருக்கு எதிராக குடியியல் வழக்கை தாக்கல் செய்யலாம். மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இரண்டு அல்லது ஒரு நாட்களுக்குள் நீதிமன்றத்தில் பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

இதற்கு அவர் பதிலளிக்கப் போகிறாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஏனென்றால் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வியன்னா உடன்படிக்கையின்படி அவருக்கு இராஜதந்திரப் பாதுகாப்பு உள்ளதாகவும் அது அவரைக் பாதுகாக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி இதுகுறித்து ஜனாதிபதி பான் கீ மூனுடன் பேசியதாகவும் கூறப்பட்டுள்ளது.இந்த அறிக்கையை பார்க்கும் போது இராஜதந்திரச் சலுகையைப் பயன்படுத்தி சவேந்திர சில்வாவைப் பாதுகாக்கவே அரசாங்கம் முனைவதாகத் தெரிகிறது.

நன்றி:-தமிழ்மிரர்

# யுத்தக் குற்றம் தொடர்பில் நீதியான விசாரணை அவசியம்

## ஜிம்மெக்டொனால்ட் வலியுறுத்து



(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணை நடத்தப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை குறித்து நிபுணர் ஜிம்மெக்டொனால்ட் வெள்ளை மாளிகையில் வலியுறுத்தியுள்ளார்.

ஜிம்மெக்டொனால்ட் சர்வதேச மன்னிப்புச் சபையின் அமெரிக்க அலுவலகத்தில் கடமையாற்றி வருகின்றார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகளுக்கு அமெரிக்கா ஆதரவளிக்க வேண்டுமெனக் கோரி மகஜர் ஒன்றையும் அவர் வெள்ளை மாளிகையில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படையினர் மேற்கொண்ட குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் காத்திரமான விசாரணைகளை நடத்தத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சகல தரப்பினருக்கும் நியாயம் கிட்ட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைகளுக்கு அமெரிக்க அரசாங்கம் பகிரங்கமான ஆதரவினை வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த மகஜரில் 5 ஆயிரம் பொதுமக்கள் கையொப்பமிட்டால் ஜிம் மெக்டொனால்டின் கோரிக்கை குறித்து பரிசீலனை செய்ய முடியும் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. (4-2)

# பொதுநலவாய நாடுகள் மனித உரிமை தொடர்பில் கவனம் செலுத்த வலியுறுத்து

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த நாடுகள் மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்தவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் 54 நாடுகளிலும் மனித உரிமை நிலைமைகளை உறுதிப்படுத்த காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஒரு தரப்பினர் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக எதிர்வரும் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் மனித உரிமை விவகாரங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென சில நாட்டுத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மக்களின் வாழ்க்கையை உயர்த்த வேண்டுமாயின் மனித உரிமை விவகாரங்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது எனத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா மற்றும் அதன் காலனித்துவ நாடுகளும் வேறும் சில நாடுகளும் பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியமானது என முதன்மையாளர்கள் குழு 204 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கு முக்கியமானது என முதன்மையானவர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் செல்வந்த நாடுகளான அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் மனித உரிமை விவகாரத்தை வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. (4-2)

# தொற்றுநோய் அல்லாத நோய்களை தெளிவுபடுத்த இணைப்பு நிலையங்கள்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

தொற்றுநோய் அல்லாத நோய்களைத் தடுப்பதற்கு நாடு முழுவதும் 140 இணைப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது.

இத்தகைய நோய்கள் குறித்து மக்களை தெளிவுபடுத்துவதற்காகவே இணைப்பு நிலையங்களுக்கு உத்தியோகத்தர்கள்நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

தொற்றுநோய் அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் இதன் மூலம் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சு குறிப்பிடுகிறது.

கடந்த 50 ஆண்டு காலத்தில் தொற்றுநோய்கள் 3 வீதம் முதல் 24 வீதம் வரையில் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் நாட்டின் பிரதான வைத்தியசாலைகள் மட்டத்தில் இணைப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தொற்றுநோய் அல்லாத நோய்களைத் தடுப்பதற்காக 300 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (4-2)

# இலங்கை மீனவர்கள் இந்திய கடற்படையினரால் ஒப்படைப்பு

## கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலையான இலங்கை மீனவர்கள் 10 பேரையும் அவர்களுடைய இரண்டு படகுகளையும் இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் நேற்று மாலை இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காங்கேசன்துறை வடக்கேயுள்ள கடற்பரப்பில் வைத்து குறித்த மீனவர்கள் இந்திய கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் கடற்படையினரிடம் ஒப்படைத்ததாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இந்திய அதிகாரிகளால் விடுதலை செய்யப்பட்ட மேலும் 35 இலங்கை மீனவர்கள் இன்று தம்மிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மேலும் 41 இலங்கை மீனவர்கள் அங்கு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது. (4-2)

# கனடாவில் வேலை பெற்று தருவதாக கூறி மோசடி செய்த மூவர் கைதாகினர்

(கொழும்பு)

கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி கோடிக்கணக்கான ரூபாய்களை நபர்களிடமிருந்து வசூலித்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹரகம பகுதியில் இயங்கிவந்த நிறுவனமொன்றின் உரிமையாளர் அங்கு பணி புரிந்த இரண்டு ஊழியர்கள் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிறுவனம் நிதி மோசடியில் ஈடுபட்டதாக நுகேகொடை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவிற்கு 13 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாடு செய்தவர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து வங்கிகள் ஊடாக சந்தேகநபரின் வங்கிக் கணக்கிற்கு பண வைப்பு செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (4-2)

# 2011.10 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ★கி.மு 2333-கொரியா டங்கூன் வாஞ்சியோம் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- ★1739-ரஷ்ய- துருக்கி போர் 1736-1739 முடிவில் ரஷ்யாவுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.
- ★1778-பிரித்தானியாவின் கப்டன் ஜேம்ஸ் குக் அலாஸ்காவில் தரையிறங்கினான்.
- ★1908-பிராவ்டா செய்திப் பத்திரிகை லியோன் ட்ரொட்ஸ் கியினாலும் அவரது சகாக்களினாலும் வியென்னாவில் வெளியிடப்பட்டது.
- ★1918-மூன்றாம் போரிஸ் பல்கேரியாவின் மன்னனாக முடிசூடினான்.
- ★1929-சேர்பியா, குரோவேசியா, சிலவேனியா இணைக்கப்பட்டு அதற்கு யூகொஸ்லாவிய இராச்சியம் எனப் பெயரிடப்பட்டது.
- ★1932-ஈராக், பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- ★1935-இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- ★1952-ஐக்கிய இராச்சியம் வெற்றிகரமாக அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- ★1962-சிக்மா 7 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. வொல் லிஷீரா 6 தடவை பூமியைச் சுற்றினார்.
- ★1981-வட அயர்லாந்து பெல்பாஸ்ட் நகரில் மேஸ் சிறைச்சாலையில் ஐரிஷ் குடியரசு இராணுவக் கைதிகளின் ஏழு மாத உண்ணாநோன்பு முடிவுக்கு வந்தது. 10 பேர் இறந்தனர்.
- ★1985-அட்லாண்டிஸ் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- ★1990-ஜேர்மனியின் கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணைந்தன. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு மேற்கு ஜேர்மனியுடன் இணைந்தது.
- ★1993-சோமாலியாவின் போர் பிரபு முகம்மது ஃப்ரா ஐடிட் என்பவனின் தலைமையிலான ஆயுதக் குழுவினரைப் பிடிக்க எடுத்த முயற்சியில் 18 அமெரிக்கப் போர் வீரர்களும் ஆயிரம் சோமாலிகளும் கொல்லப்பட்டனர்.
- ★2001-வங்காளதேசத்தின் நாடாளுமன்றத் தேர்தலில் கலீதா சியாவின் பங்களாதேஷ் தேசியக்கட்சி வெற்றி பெற்றது.

சிறப்பு நாள்

★ஈராக்- சுதந்திர தினம் (1932)

# நவீன எண் சோதிடம்




## வெற்றி மேல் வெற்றி பெற்று சிறப்புற்று வாழ்வர்

61

### உடல் எண் 7 உயிர் எண் 5

7,16,25 போன்ற தேதியில் பிறந்து பிறந்த தேதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் 5 வருமேயானால் கேது, புதன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். சிந்தனாசக்தியும் சுறுசுறுப்பும் கொண்ட இவர்கள் தொழில் செய்து வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமைந்து விட்டால் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித்தவிக்கின்றனர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் கண்ணியம் மிக்கவர்களாகவும் காட்சியளிப்பர். தனது முன்னேற்றத்திற்காக எப்பொழுதும் திட்டம் திட்டிக்கொண்டே இருப்பர். தனது வருமானத்தை பெருக்குவதற்காக பல்வேறு வழிகளில் முயல்வர்.

பெயர் நன்றாக அமையப் பெற்றவர்கள் வெற்றிமேல் வெற்றி பெற்றுச் சிறப்புற்று வாழ்வர். ஆனால் பெயர் நன்றாக அமையாதவர்கள் குழப்பமான குடும்ப வாழ்க்கையும் வீண் பிரச்சனைகளும், தொழில் தடங்கலும் ஏற்பட்டு வருந்தி வாழ்வர். பிறர் செய்கின்ற காரியங்களை வேகமாக நடக்காவிட்டால் அவர்களை சோம்பேறி என்று திட்டுவர். எந்தக் காரியங்களும் துரிதமாக நடக்க வேண்டும்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

என்று எண்ணுவர். இவர்களுக்கு பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் பெரும் பணம் சம்பாதித்து விடுவர்.

ஆனால் வாழ்க்கையில் எவ்வளவு முன்னேறினாலும் மன நிலை அமைதி கொள்ளாது. இதனால் பலர் பல பக்திமானாக மாறி விடுகின்றனர். தனக்கு மிஞ்சிய ஒரு சக்தி இருப்பதாக எண்ணி அதைப்பற்றி ஆராய்வர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்னை உயர்த்திக் கொள்ளத் தகுதியில்லாதவர்கள் பிறரை உயர்த்த முடியாது என்று கூறுவர். இவர்களுக்கு பெயர் நல்ல எண்களில் அமைந்து விட்டால் வேகமாக முன்னேற்றத்தை நோக்கிச் செல்வர். அப்படிப் பெயர் பொருத்தமில்லாது போய் விட்டால் வாழ்க்கை தலைகீழாக மாறிவிடும். இவர்களது மனம் நேர்மையைத் தவிர போலிகளை வெறுக்கும். கடவுள் நம்பிக்கை கொண்ட இந்த எண்ணிக்கைக் காரர்களுக்குப் புனிதயாத்திரை செல்வதில் அதிக ஆர்வம் இருக்கும். தான் செய்தவற்றை கூடத் தனிமையில் நினைத்து வருந்துவர். இந்த எண்ணிக்கைக்காரர்களிற் பலர் வேலை பார்ப்பவராகவும் சிலர் சொந்தத் தொழில் செய்பவராகவும் விளங்குகின்றனர். இவர்களது முன் கோபத்தை கண்டு பல நண்பர்கள் அஞ்சி ஒதுங்கிவிடுகின்றனர். இவர்களது மனம் பெரிய தொழிற் கூடங்களையும் நீர் வீழ்ச்சிகளையும் நீர்த்தேக்கங்களையும் மலைப் பிரதேசங்களையும் இரசிக்கக் கூடியது.

எந்த ஒரு புதுமையான பொருளைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராச்சியில் இறங்கிவிடுவர். தைரியசாலிபோல் காட்சியளிக்கும் இவர்கள் உள்ளூரப் பயந்தவர்கள். தான் செய்கின்ற ஒவ்வொரு காரியங்களுக்கும் ஆண்டவன்தான் காரணம் என்று நம்புவர். ஏராளமான பொருளாதார வசதி இருந்தாலும் நம்மைப் போன்று பிறரும் வாழ்க்கையில் உயரவேண்டும் என்று எண்ணுவர்.

குறுக்குக் கேள்வி கேட்பதிலும் வேதாந்தம் பேசுவதிலும் சிறந்து விளங்குவர். சிலருக்கு இவரைப் பார்த்தவுடன் வெறுப்புத் தோன்றும். ஆனால், பிறருக்குத் தீங்கு விளைவிப்பவர் அல்லர். சில நேரங்களில் தனது வாயால் தனக்குக் கேடு விளைவித்துக் கொள்வர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் ஏராளமான

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

சொத்தோடு எல்லாவளமும் பெற்று வாழ்வர். இவர்கள் மனம் சட்டம், சமயம், கலை , இலக்கியம், இசை, ஜோதிடம், மருத்துவம் இவற்றில் ஆராய்ச்சி கொள்ளும். அழகாக வீட்டை வைத்துக் கொள்வதிலும் தான் வைத்திருக்கும் வாகனங்களை அழகாக வைத்துக் கொள்வதிலும் ஆர்வம் உள்ளவராக இருப்பர். பிறருக்கு உதவிசெய்யும் போது எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளக்கூடாது என்று எண்ணுவர்.

ஆனால், பெயர் பொருத்தமாதாக அமைந்து விட்டால் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறுவர். அப்படிப் பெயர் பொருத்தமின்றி அமைந்தால் பல்வேறு சோதனையில் மாட்டிக் கொண்டு திண்டாடுவர். இதனால் பெயரைப் பொருத்தமான எண்ணில் அமைத்துக் கொள்வது அவசியம்.

**தொழில்**

எழுத்தாலும், பேச்சாலும் கமிஷன், ஏஜென்சீஸ் மூலமும் பொருளீட்டுவர். மருத்துவம் , வாகனம், ஒப்பந்தம், மெற்றல் சம்பந்தமான தொழிலாலும் பச்சை நிறப்பொருட்களாலும் வாழ்கையில் உயர்வு உண்டு.

**நோய்**

பொதுவாக இந்த எண்ணிக் கைக்காரர்களுக்கு மனக்குழப்பம், வாயு சம்பந்தமான கோளாறுகள், கண், காது, முதுகுவலி போன்றவைகள் வந்துநீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்கள் கீழே கொடுத்துள்ள புதன், சுக்கிரன் ஆதிக்கமான 14,23,32,41,50,59,77;15,24,33, 42,60,69 போன்ற எண்களில் பெயரை அமைப்பது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-2,5,6

யோகமான தேதிகள்-2,11, 20,29; 5,14,23; 6,15,24

யோகமான மோதிரக்கல்- வைடூரியம், டைகர் ஐ, மூன் ஸ்ரோன், வைரம்

யோகமான நிறம்- பச்சை, மஞ்சள்,சாம்பல் நிறம், இலேசான நீலம்

ஆகாத தேதி- 9,18,27

ஆகாத நிறம்- சிவப்பு

* * *


### பெயர் எண்களின் பலன்

**80 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் 5,14,23,6,15,24 போன்ற தேதியில் பிறந்திருந்தால் ஓரளவு முன்னேற்றத்தைக் கொடுக்கும். மற்றவர்களுக்கு இந்த எண் ஆபத்தான சூழ்நிலையையும் பயங்கரமான மன பீதியையும் கொடுக்கும். இதனால் இந்த எண் விரும்பத்தக்கதல்ல.

**81 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்களுக்கு சிலர் ஏவல் செய்யக் காத்திருப்பார்கள். பலருக்கு போதிக்கும் போதகராக



விளங்கும் இவர்கள் முன்னேற்றத்தில் ஆர்வம் உள்ளவர்களாய் இருப்பர். தன் நிலையை உயர்த்திக் கொள்ள எப்பொழுதும் திட்டம் போட்ட வண்ணம் இருப்பர். பொதுவாக இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் சகல பாக்கியமும் பெற்று, மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்துவர்.

**82 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் கடமை, கண்ணியம் என்ற இரண்டையும் பின்பற்றி பலருக்குத் தலைவராகவும் வழிகாட்டியாகவும் வாழ்வர். சாதாரண குடும்பத்தில் பிறந்திருந்தால் கூட இவரது உன்னதமான உழைப்பால் மேன்மையான நிலையை அடைவர். வாகனப்பிரியரான இவர்கள் புதுப்புது வாகனங்களை வாங்க விரும்புவர். வெள்ளி, தங்கம், நவரத்தினங்கள் சேர்க்கை உண்டாகும். இவர்களுடைய கவர்ச்சியான பேச்சாலும், காந்தக் கண்ணாலும் கவரக்கூடிய சக்தி இவர்களுக்கு உண்டு. ஆனால் போகம் சம்பந்தமான விடயங்களில் நிதானம் தேவை.

**83 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் எல்லோரையும் மதிப்பவராகவும், பலருக்கு உதவுபவராகவும் வாழ்பவராவர். இதனால் எல்லோரும் இவரை தெய்வீக மனிதர் என்று வணங்குவர். இவர்கள் விரும்பாதிருந்தாலும் பெரும் பதவி நாடி வரும். எப்பொழுதும் சந்தோசமான வாழ்க்கை உண்டு. நிரந்தரமான பதவியும், நீடித்த செல்வமும் எப்பொழுதும் உண்டு.

**84 எண் பலன்**

இந்த எண்ணை பெயரில் உடையவர்கள் வாழ்க்கையில் எதிர் நீச்சல்போட வேண்டியிருக்கும். தேவையற்ற பகையும் வம்பு, வழக்குகளும் ஏற்படும். மனம் நிலை கொள்ளாது. காரணமற்ற கவலையால் வாடும் இவர்களது மனதைத் திடப்படுத்திக் கொள்வதற்காக பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிப்பர். ஆனால் 3,12,21,30 போன்ற தேதியில் பிறந்திருந்தால் வாழ்க்கை மகச் சிறப்படையும். (தொடரும்)

# சிங்கள மக்களின் கோரிக்கைக்கு அமையவே முல்லைத்தீவில் புதிய உதவி அரச அதிபர் பிரிவு

## புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு குறித்து தகவல்

முல்லைத்தீவின் வெலிஓயா குடியேற்றத் திட்ட மக்களின் நன்மை கருதி புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்றினை எதிர் வரும் 15 ஆம் திகதி திறப்பதற்கு பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குள் குடியேறியுள்ள சிங்கள மக்கள் தமக்கு கரைதுறைப்பற்று பிரதேச செய லாளர் பிரிவு நீண்ட தூரம் என கடந்த தேர்த லில் கோரிக்கை விட்டதன் அடிப்படையலேயே தற்போது இப்பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த மூன்று மாதங்களாக மண்கிண்டி மலை(ஜனகபுர) பிரதேசத்தில் வெளிப்படைத் தன்மையற்ற விதத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தற்காலிகமாக இயங்கி வருவ தாகவும் இதில் சுமார் 7 கிராம அலுவலர்கள் கடமையாற்றுவதாகவும் தெரியவருவதுடன் கடந்த 28 ஆம் திகதி இப்பிரதேசத்திற்கான அபிவிருத்தி குழு கூட்டமும் தற்காலிக உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இடம் பெற்றதுடன் அப்பகுதி சிங்கள மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வீதி அபிவிருத்தி மற்றும் மின்சார அபிவிருத்திகள் முக்கியத் துவப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுவதா கவும் தெரியவருகின்றது.

இதேவேளை இவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவானது கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுகேணி, செம்மலை மத்தி மற்றும் தெற்கு கணுக்கேணி, மாமூலை ஆகிய முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் கிராமங்களையும் வவுனியா வடக்கு நெடுங் கேணி பிரதேச செயலாளர் பிரிவினை உள் ளடக்கிய ஒதியமலை, பழம்பாசி, பட்டிக்குடி யிருப்பு, பெரியகுளம், வெடிவைத்தகல் ஆகிய தமிழ் கிராமங்களையும் உள்ளடக்கவுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் சிங்கள மொழியிலான உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் உள்வாங்கப்பட்டால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இத்துடன் தமிழர்கள் பூர்வீகமாக தமது விவசாயத்தை மேற்கொள்வதற்கு ஆதார மாகவிருந்த முந்திரிகைகுளம், நித்தகுளம், தண்ணிமுறிப்பு குளம் இதனுள் உள்ளடங் கும் என்பதுடன் மேலதிக சிங்கள குடியேற் றங்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளதெனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர்.

இதேவேளை இவ்வுதவி அரசாங்க அதி பர் பிரிவினை உருவாக்குவதற்காக பாண் டியன் குளம் மற்றும் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை ஒன்றாக் கவுள்ளதாகவும் அதனுள் அடங்கும் கிராம அலுவலர் பிரிவுகளில் 17 இனை மூடுவ தற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இத்திட்டமானது நெடுங்கேணி, மாமூலை, குமுழமுனை, நாயாறு, கணுக்கேணி ஆகிய வற்றை உள்ளடக்கிய வெலிஓயா மாவட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்றும் இதன்மூலம் வடக்கு-கிழக்கு என்ற பிரிவி னையை தடுப்பதற்கான முன்னேற்பாடாக 1972 ஆம் ஆண்டு பேராசிரியர் காலிங்க குணரட்னவினால் திட்டமிடப்பட்டதாகவும் எனினும் அக்காலப்பகுதியில் அதனை நடை முறைப்படுத்த முடியாது போனதுடன் காமினி திசாநாயக்க 1984 ஆம் ஆண்டு வர்த்தமா னியில் பிரசுரித்திருந்த போது அதனை தமி ழரசுக்கட்சியின் செயலாளர் அ.அமிர்த லிங்கம் எதிர்த்ததால் கைவிடப்பட்டதாகவும் அக்கிராமவாசியொருவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தையே தற்போது அரங்கேற்று வதற்காக முற்படுவதாகவும் அதனடிப்படையி லேயே அபிவிருத்தி குழு கூட்டங்கள் நடத்தப் படுவதுடன் காப்பெற் வீதிகளை அமைப்பதற் கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாக தெரிய வருகின்றது.

எனினும் இவ்வாறான நிலைக்கு தமி ழர்கள் மேற்படி தமிழர் பிரதேசத்தில் நமக் கென உரித்தாகவுள்ள காணிகளில் குடி யேறாமையே காரணம் எனவும் கூறப்படு கின்றது. (4-2)

# இவ்வாண்டில் எலிக்காய்ச்சல் நோயால் 65 பேர் உயிரிழந்துள்ளனர்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் எலிக்காய்ச்சலால் 65 பேர் உயிரிழந்துள்ளதுடன் 5 ஆயிரத்து 387 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

குருநாகல் மாவட்டத்திலேயே கூடுதல் எண்ணிக்கையானோர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதுடன் அந்த மாவட்டத்தி லேயே ஆயிரத்து 435 பேர் காய்ச்சலால் பீடிக்கபபட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 424 பேரும் அம் பாந்தோட்டை மாவட்டத்தில் 467 பேரும் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது. (4-2)

# இலங்கை மீது சுமத்தப்படும் குற்றங்கள் பொய்யானவை

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாடுகள் இலங்கை மீது சுமத்தும் குற்றச் சாட்டுக்கள் பொய்யானவை என கோத்தபாய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். பொதுமக்களைக் கொலை செய்வது அரசினதோ அல்லது இராணுவத்தினதோ கொள்கை அல்லவென்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாடுகளால் எம் தாய்நாட்டின் மீது சுமத் தப்பட்டிருக்கும் போர்க்குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற் றவை. அடிப்படையற்றவை. இறுதிப் போரின்போது இடம்பெற்ற சிவிலியன்கள் உயிரிழப்பு மிகவும் குறைவானவை. ஆயினும் இன்று அது குறித்து போலியான எண்ணிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பொதுமக்களை கொலை செய்வது அரசினதோ அல்லது இராணுவத்தினதோ கொள்கை அல்ல. இதற்கான ஆதாரங்களை இப்போது நாம் சேகரித்து வருகின்றோம்.

இதனை நிரூபித்து காட்டுவோம். எமது ஆதாரங்கள் குறித்து விரைவில் சர்வதேசத்திற்கு அறிவிப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-2)

# வியன்னா உடன்படிக்கையின் கீழ் சவேந்திர சில்வாவை கைது செய்யமுடியாது

(கொழும்பு)

நியூயோர்க்கில் இலங்கையின் ஐக்கிய நாடுகள் பிரதி வதிவிடப்பிரதிநிதி சவேந்திர சில்வா மீது அமெரிக்காவில் தாக்கல் செய் யப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் இலங்கை இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்தி யுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ஆகியவற்றுடன் இந்த தொடர்புகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

வியன்னா உடன்படிக்கையின் கீழ் சவேந்திரசில்வாவுக்கு இராஜதந்திர தன்மை வழங்கப்பட வேண்டும்.

எனவே அவருக்கு எதிராக குற்றவியல் வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்பதே இலங்கையின் வாதமாகும்.

எனினும் வழக்கை தாக்கல் செய்த நியூயோர்க் சடடக்கல்லூரி சட்டத்தரணிகள் வாதத்தின்படி போர்க்குற்றம் ஒன்றில் ஈடு பட்டவர் வெளிநாட்டவர் ஒருவரை அமெரிக்க குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஐக்கிய நாடுகள் சபையும் அமெ ரிக்க இராஜாங்க திணைக்களமும் சவேந்திர சில்வா தொடர்பில் தமது நிலைப்பாடுகளை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது. (4-2)

# ஜே.வி.பி.யின் குழப்ப நிலைகளுடன் மூன்றாம் தரப்பினருக்கு தொடர்பு?

## அநுரகுமார எம்.பி. தெரிவிப்பு

ஜே.வி.பி. கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பாரிய குழப்பநிலைமைகளுக்கும் மூன்றாம் தரப்பின ருக்கும் இடையில் தொடர்பு காணப்படலாம் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைமை குறித்து ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்கள் குறிப்பாக அரசாங்க ஊடகங் களில் அளிக்கப்பட்டு வரும் முக்கியத்துவம் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக கிளர்ச்சிகுழு உறுப்பினர்கள் விவகாரங்களில் பொலிஸார் மிகவும் நெகிழ் வுப் போக்குடன் செயற்படுகின்றனர்.

காலனித்துவம், முதலாளித்துவம் போன்ற வற்றுக்கு எதிரான ஜே.வி.பி.யின் முன்நகர்வு களை தடுக்க இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி.கிளர்ச்சியாளர்கள் மீள இணைந்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கிளர்ச்சியாளர்களுக்கு தலைமை தாங்கிய சிலரைத் தவிர ஏனைய அனைவரும் மீளவும் கட்சியில் இணைந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித் துள்ளார். (4-2)

# பேச்சுவார்த்தையின் பலாபலன்களை செயற்பாடுகளால் வெளிப்படுத்துங்கள்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இடம் பெறும் பேச்சுவார்த்தைகளின் பிரதிபலன் களை செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்தக்கோரிக்கையை தமிழ்த்தேசிய கூட் டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் முன் வைத்துள்ளார்.

சர்வதேசத்தின் தலையீட்டில் பிரச்சினை களுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார். (4-2)

# சாஸ்திர முறைப்படி நாட்டில் அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்க அமைச்சரவை அடுத்த வருட ஆரம்பத்தில் மீளமைக்கப்பட வுள்ளது. இதன்போது சில அமைச்சர்கள் பொறுப்புகளில் இருந்து அகற்றப்படவுள்ளனர்.

ஜனாதிபதி சாஸ்திரத்தில் நம்பிக்கை கொண்டவர் என்ற அடிப்படையில் இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமது பொறுப்புகளில் தற்போது திருப்திகொள்ளாத பல அமைச் சர்களை திருப்திகொள்ளவைக்கவும் இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட வுள்ளது.


தற்போது பாதுகாப்பு, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் நிதி போன்ற துறைக ளுக்கான அமைச்சை ஜனாதிபதி கொண் டிருக்கிறார்.

பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தித் துறையை அவருடைய சகோதரர் பசில் ராஜபக்ஷ கொண்டிருக்கிறார்.

இலங்கையில் தற்போதைய நிலையில் 59 அமைச்சர்களும் 33 பிரதியமைச்சர்க ளும் பதவியில் உள்ளனர். (4-2)

# தனித்தெலுங்கானா விவகாரம் குறித்து ஆராய்வதற்கு கால அவகாசம் தேவை

## மத்திய அரசு தெரிவிப்பு



(புதுடில்லி)

தெலுங்கானா விவகாரத்தில் மத்திய அரசு விரைவாக முடிவெடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வரும் நிலையில் சர்ச்சைக்குரிய இந்தக்கோரிக்கை தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளுடன் மேலும் ஆலோசனை நடத்த வேண்டியுள்ளது. இந்தப் பணிகள் முடிவடைய இன்னும் கால அவகாசமாகும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தெலுங்கானா தனி மாநில கோரிக்கை தொடர்பாக கடந்த 30 ஆம் திகதி காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் குழு ஆலோசனை நடத்தியது. இந்தக் கூட்டத்தில் தெலுங்கானா தொடர்பாக ஆந்திரா மாநில எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் காங்கிரஸ் தலைவர்களிடம் கருத்து கேட்டு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம்நபி ஆசாத் கட்சித் தலைவர் சோனியாவிடம் சமர்ப்பித்த அறிக்கை பற்றி விவாதிக்கப்பட்டது. இந்நிலையில் அதே தெலுங்கானா பிரச்சினை தொடர்பாக நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, மத்திய சுகாதார துறை அமைச்சர் குலாம்நபி ஆசாத், சோனியாவின் அரசியல் ஆலோசகர் அகமது படேல் ஆகியோர் நேற்று முன்தினம் நிதி அமைச்சகத்தில் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனைக் குப்பின் நிருபர்களிடம் பேசிய மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதாவது,

தெலுங்கானா தனி மாநில கோரிக்கை தொடர்பாக நாங்கள் ஆலோசனைகள் நடத்தி வருகிறோம். கடந்த 30 ஆம் திகதி காங்கிர ஸ் உயர்மட்டக்குளு ஆலோசனை நடத்தியது. இது தொடர்பாக அமைச்சர்கள் சிலருடன் அதுபற்றி விவாதித்தேன். பல் வேறு அரசியல் கட்சிகளுடன் மேலும் ஆலோசனை நடத்த வேண்டியயது அவசியம். இந்தப் பணிகள் எல்லாம் முடிவடைய கால அவகாசமாகும். தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி ஐதராபாத் உட்பட தெலுங்கானா பகுதிகளில் 10 இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நடந்து வரும்போராட்டங்கள் மக்களின் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது, நிலைமை எவ்வளவு மோசமாக உள்ளது என்பதையும் நாங்கள் அறிவோம் என பிரணாப் முகர்ஜி கூறினார்.

தன்னை வாழ்த்த வீட்டிற்கு வந்தவர்கள் மத்தியில் பேசிய அவர் கூறியதாவது, பல கலாசாரங்களை பின்பற்றக்கூடிய மக்கள் ஐதராபாத்தில் உள்ளனர். கடையடைப்பு போராட்டங்கள், போராட்டங்கள் என்ற பெயரில் ஐதராபாத்தின் அமைதியை சீர்குலைக்க யாராவது முற்பட்டால் அப்படிப்பட்டவர்களை இரும்புக்கரம் கொண்டு மாநில அரசு ஒடுக்கும். தெலுங்கானா ஆதரவாளர்கள் நடத்தும் தொடர் போராட்டங்களால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட வான் பேருந்துகள் ஓட முடியாத நிலை உள்ளது.

வேலைநிறுத்தம், கடையடைப்பு என்ற பெயரில் ஏழை மக்களை சிரமத்திற்கு உள்ளாக்குவது நியாயமற்றது. வேலை நிறுத்தத்தால் நிலக் கரி உற்பத்தி தடைப்பட்டு மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு மாநிலம் இருளில் தள்ளப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை வாங்க அரசு நாள் ஒன்றுக்கு 12கோடி ரூபாய் செலவிட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் ஐதராபாத் உட்பட பல நகரங்களில் இன்னும் தினமும் இரண்டு முதல் நான்கு மணிநேரம் வரை மின்தடை அமுலில் உள்ளது என கிரண் குமார் ரெட்டி கூறினார்.

தெலுங்கானா தொடர்பாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றாலோ அல்லது முடிவெடுக்க வேண்டும் என்றாலோ அதற்கு காலஅவகாசமாகும். தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள சில கட்சிகளின் மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நடத்த வேண்டும். தற்போது ஒரு கட்ட நடவடிக்கை முடிந்துள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகும்.

தெலுங்கானா தனி மாநில கோரிக்கையை நிறைவேற்றுவது தொடர்பான அறிக்கையை மத்திய அரசு கடந்த 30 ஆம் திகதிகுள் வெளியிட வேண்டும் என ரெட்டி கெடு விதித்திருந்தார். அந்தக் கெடுவிற்குள் மத்திய அரசு அறிவிப்பு வெளியிடாததால் அவர் நேற்று முன்தினம் ஆந்திரா ஆளுநர் நரசிம்மனை சந்தித்து தன் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை அளித்தார். பின் சட்டசபைக்கு சென்று சட்டசபைச் செயலரை சந்தித்து எம்.எல்.ஏ பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தையும் அளித்தார். இவர் தெலுங்கானாவில் நல் கொண்டா பகுதியைச் சேர்ந்தவர். (4-2)

# 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் 70 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு

## சி.பி.ஐ தெரிவிப்பு

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ தனது நிலையை அடிக்கடி மாற்றுவது குற்றம் சாட்டப்படவர்களுக்கு நெருக்கடியை அதிகரிக்கிறது. 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் காரணமாக மத்திய அரசுக்கு ரூ 70 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக குற்றப்பத்திரிகையில் சி.பி.ஐ தெரிவித்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் அரசுக்கு ரூபா 30 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதாக குற்றப் பத்திரிகை சி.பி.ஐ ஏற்கனவே கூறியிருந்தது. தற்போது சி.பி.ஐ தனது நிலையை மாற்றிக் கொண்டுள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் இழப்பு குறித்து சி.பி.ஐ 32 பக்க தகவல் குறிப்பை உச்ச நீதிமன்றில் நேற்று தாக்கல் செய்தது. அதில் ஸ்பெக்ட்ரம் ஊழல் காரணமாக மத்திய அரசுக்கு ரூ 70 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளது. சி.பி.ஐயின் இந்த புதிய கணக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நெருக்கடியை அதிகரித்துள்ளது.

(4-2)

# மக்கள் நினைத்தால் யாரும் நிரந்தர முதல்வராக முடியாது

## விஜயகாந்த் தெரிவிப்பு

(புதுடில்லி)

சிலர் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் என கூறுகிறார்கள். மக்கள் நினைத்தால் தமிழகத்தில் யாரும் நிரந்தர முதல்வராக இருக்க முடியாது என விஜயகாந்த் கூறியுள்ளார்.

கும்பகோணம் நகராட்சி தலைவர் பதவிக்கு போட்டியிடும் தே.மு.தி.க வேட்பாளர் கோமதி சிவா மற்றும் கவுன்சிலர் பதவிகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதிரித்து அக்கட்சி தலைவர் விஜயகாந்த் நேற்று கும்பகோணம் மகாமக குளக்கரையில் பிரசாரம் செய்துள்ளார்.

அப்போது அவர் பேசியதாவது , உள்ளாட்சி தேர்தலில் உங்களுடைய வாக்குகளை இரு கட்சிகளுக்கு மாறி மாறி வாக்களித்தது போதும். ஒரு முறையாவது மாற்றிதான் பாருங்கள்.

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தனக்கு ஞாபகமறதி அதிகமாகிவிட்டது என்று கூறியதாக நாளிதழ்களில் செய்தி வந்துள்ளது. ஒரு மூத்த அரசியல்வாதிக்கு இப்படி ஞாபக மறதி வரலாமா?

மக்களாகிய நீங்கள் தான் அவர்கள் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். அதனால் தான் இதுபோன்ற அரசியல்வாதிகள் எல்லாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



தே.மு.தி.கவுக்கு நேற்று முன்தினம் ஒரு எம்.எல்.ஏ இன்று 29 எம்.எல்.ஏ. நாளை நாட்டை ஆளுவோம். ஒருசிலர் நிரந்தர முதல்வர் என்று சொல்கிறார்கள். மக்கள் நினைத்தால் யாரும் நிரந்தரம் கிடையாது.

நான் நடிகராக இருந்து கொண்டு தையல் மிஷின் உதவித் தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கினேன். என்னிடம் ஆட்சியை கொடுத்தால் நான் மேலும் உதவிகளை செய்யமாட்டேனா.

அதிகாரிகள் யார். இலஞ்சம் வாங்கினாலும் அவர்களை விடமாட்டேன். எனது கட்சிக்காரர்களாக இருந்தாலும் அவர்களையும் இலஞ்சம் வாங்கினால் விடமாட்டேன் என்றார். (4-2)

# பாரதச் செய்திகள்

# சிதம்பரம், பிரணாப் முகர்ஜிக்கு இடையே கருத்து வேறுபாடுகள்

## 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரமே காரணம்

(கொல்கத்தா)

2ஜி ஸ்பெக்ட்ரம் விற்பனை விலை நிர்ணய விவகாரத்தில் ப.சிதம்பரத்தை குற்றம் சாட்டி பிரதமர் அலுவலகத்துக்கு நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி எழுதிய கடிதம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்த விவகாரத்தினால் அதிருப்தி அடைந்த பிரணாப் முகர்ஜி தனது பதவியை இராஜினாமா செய்வதாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கூறியதாகவும் அவரை மன்மோகன் சிங் சமாதானப்படுத்தியதாகவும் தகவல்கள் பரவின. சமீபத்தில் இருவரும் பத்திரிகையாளர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்து தங்களுக்குள் எந்த பிரச்சினையும் எழவில்லை என்று விளக்கம் அளித்தனர்.

இதை பாரதீய ஜனதா கட்சி கடுமையாக விமர்சித்தது கிடையாது என்று விளக்கம் அளித்த சம்பவம் முன்பு எப்போதும் நடந்திராத நிகழ்ச்சி என்று டில்லி மேல் –சபை எதிர்க் கட்சி தலைவர் அருண்ஜெட்லி விமர்சனம் செய்தார்.

பிரணாப் முகர்ஜி பதவிவிலக வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்நிலையில் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் பிரணாப் முகர்ஜி பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

எனக்கு எதிராக பங்கம் விளைவிக்கக் கூடிய கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. 2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் பிரதமர் அலுவலகத்துக்கு நிதி அமைச்சகம் அனுப்பிய குறிப்பை (கடிதம்) சர்ச்சைக்கு உரியதாக முயற்சி நடக்கிறது. கடித விவகாரம் முடிந்து போன ஒன்று. கருத்து வேறுபாடு இல்லை. இந்த விவகாரத்தில் எனக்கும் உள்துறை மந்திரி ப.சிதம்பரத்துக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுவதில் உண்மை இல்லை.

நான் பதவி விலக விரும் புவதாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கூறிய தாக வெளியான தகவல்கள் கற்பனையா னது. இதில் உண்மை எதுவும் கிடையாது. எவருக்கும் எந்த தனி நபருக்கும் பதில் அளிக்க நான் விரும்பவில்லை. நான் பதவி விலகப் போவது இல்லை என பிரணாப் முகர்ஜி கூறினார்.

(4-2)



நவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு இராமேஸ்வரம் உஜ்ஜயினி மாகாளி அம்மன் கோவில் உலக நன்மைக்காக 1008 விளக்கு பூஜை இடம் பெற்றதைப் படத்தில் காணலாம்.

# மனித உரிமைகள் விடயத்தில் மேம்பாடு காண்பதற்கு காலக்கெடு விதித்தது கனடா

## கனேடிய அமைச்சர் ஜேசன் கெனி தெரிவிப்பு

(கொழும்பு)

**கனேடிய அமைச்சர்கள் இலங்கைக்கு இந்த வருட இறுதிக்குள் விஜயம் மேற்கொள்வார்கள் என முன்னர் திட்டமிடப்பட்டிருந்த போதும் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதால் அது இந்த வருடம் இடம்பெறாது எனத் தெரிய வருகிறது.**

**மனிதவுரிமைகள் விவகாரத்தில் மேம்பாடு காண இலங்கைக்கு கனடா காலக்கெடு வழங்கியுள்ளதாக கனேடியக் குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி தெரிவித்தார்.**



போரின்பின்னரான கற்றலுக்கானஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை இன்னமும் இரண்டு மாதங்களில் இலங்கை பகிரங்க அறிக்கையாகச் சமர்ப்பிக்கவுள்ளது. இந்த அறிக்கையில் கூறப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவுமே இந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கும் கன்சவேட்டிவ் கட்சிக்கு இடையேயுமான உறவை ஏற்படுத்த முன்னின்று பல ஆண்டுகளாக உழைத்தவரான அமைச்சர் ஜேசன் கெனி தற்போது கனேடிய தமிழ்ச் சமூகத்தினுடைய மாற்றம் கண்டு தான் மன மகிழ்வதாகவும் தங்களது அரசு இலங்கை குறித்த இதே நிலைப்பாட்டடை ஆரம்பத்திலிருந்தே கொண்டிந்ததாகவும் குறிப்பிட்டார்.

கன்சவேட்டிவ் கட்சி இந்த விவகாரத்தில் ஒரு இணைந்த குழுவாகவே செயற்படுவதாகவும் இலங்கையின் போக்கில் மனிதவுரிமை மற்றுளம் உள்நாட்டுச் சட்டங்களை மதிக்கும் விவகாரத்தில் அதற்கான காலக்கெடுவை பொதுநலவாய நாடுகளின் மாநாடு கொழும்பில் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டினை மையமாக வைத்து பிரதமர் வழங்கியுள்ளார் என்று தெரிவித்தார்.

குறிப்பாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறும் ஐ.நா.வின் மனிதவுரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இந்த போரின் பின்னரான கற்றலுக்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டு பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடுவிற்கு கனடா வலியுறுத்தும் என நம்பப்படுகிறது.

இவ்வாறு செய்யப்பட்டால் போர்க்குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை என்ற வலியுறுத்தல் வலுவிழந்துவிடும் என்று நம்பப்படுகிறது.

கனடாவால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அழுத்த நடைமுறை இலங்கை அரசின் சர்வாதிகார மற்றும் மனிதவுரிமைகளின் போக்கை சீரமைப்பதற்கான ஒரு அலகாகவே மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பாக திருந்துவதற்கான காலக்கெடுவாக அது பொதுநலவாய அமைப்புக்களின் மாநாட்டை குறிவைத்துள்ளது. இலங்கைக்கு தனது நடைமுறைகளில் மாற்றத்தை கொண்டுவர அழுத்தத்தைக் கொடுக்கும் என்று நம்பப்படுகிறது.

இதேவேளை, கனடா இலங்கையின் மனிதவுரிமை மற்றும் இரு தரப்பு மீதான போர்க்குற்ற விசாரணை பற்றிய விசாரணைகளையே முன்னெடுக்கச் சொல்கிற போதும் இனப்பிரச்சினைக்கான தீர்வு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி, அகதிகளாக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் போராளிகளின் மறுவாழ்வு என்பன பற்றி எந்தக் கருத்தையும் இதுவரை சொல்லவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (4-2)

## மன்னார் கரையோரத்தில் ஹாஸ்வளம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதன்முறையாக இயற்கை ஹாஸ் போன்ற எரிபொருள் வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இன்று இடம்பெற்ற வைபவமொன்றில் இந்த விடயத்தை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்தக் ஹாசிற்கான எரிபொருள் வளம் மன்னார் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது.

(4-12)

## நினைவுப் பேரூரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் செல்லத்துரை சிவஞான சுந்தரத்தின் நினைவுப் பேருரை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சென்னை பல்கலைக்கழக, தமிழ் இலக்கியத்துறை பேராசிரியர் கலாநிதி வி.அரசு பேருரை ஆற்றவுள்ளார்.

(4-12)

# கொழும்பு மாநகரசபையில் நல்லாட்சியை ஏற்படுத்துவேன்

## வேட்பாளர் முஸம்மில் உறுதி

(கொழும்பு)

அம்பாந்தோட்டையை இலங்கையின் வர்த்தக தலைநகராக மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரசபை வேட்பாளர் ஏ.ஜே.எம்.முஸம்மில் குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைப்பதும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும் என இளம் தொழில்வல்லுநர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இத்திட்டத்தினால் நாட்டின் தலைநகரான கொழும்பு பாதிக்கப்படுமென கூறிய அவர் தான் மேஜராக தெரிவு செய்யப்பட்டால் கொழும்பு மாநகரசபையில் நல்லாட்சியை ஏற்படுத்துவதாக உறுதியளித்தார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் ஊழல் அதிகரித்துள்ளது. பங்குச்சந்தையை கையாள்வதற்கு கூட பொதுமக்களின் பணம் பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கத்திற்கு முக்கிய செய்தியை சொல்வதற்கு இத்தேர்தல் பொன்னான வாய்ப்பாகும் என அவர் கூறினார். (4-2)

# மது விற்பனையை இன்றைய தினத்தில் நிறுத்துங்கள் !

## யாழ்.மதுவரி நிலையம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக மதுஒழிப்பு தினம் இன்றாகும். இதனையையொட்டி யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மதுவிற்பனை நிலையங்களும் தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மதுவரி நிலையத்தின் பொறுப்பதிகாரி கிருபாகரன் அறிவித்துள்ளார்.

அறிவித்தலை மீறி மதுவிற்பனையில் ஈடுப டுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக் கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (4-6)

# அரசசேவையில் இணைத்துக்கொள்ள பல பரீட்சைகள் இம்மாதத்தில்

## ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான பல பரீட்சைகள் இம்மாதத்தில் நடைபெறவிருப்பதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

வடமேல் மற்றும் மேல்மாகாண ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண மும்மொழி ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கான பரீட்சை எதிர்வரும் 23 அம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை மத்திய வங்கி பாதுகாப்பு ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக் கான உதவிச் செயலாளர்கள்,1 உதவிக்கணக்காய்வாளர்கள் மற்றும் உதவி நிதி அதிகாரிகள் ஆகிய பதவிகளுக்கான நியமனம் தொடர்பான போட்டிப் பரீட்சைகளும் எதிர் வரும் 15,16, 22 ஆகிய தினங்களில் நடை பெறவுள்ளன.

பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் எதிர்வரும் சில தினங்களில் விண்ணப்பதாரிடம் அனுப்பப்படவுள்ளன. (4-12)

# தொம்பே மரணம் தொடர்பில் 5 பொலிஸ் அதிகாரிகள் கைது

(கொழும்பு)


தொம்பே பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது உயிரிழந்த நபர் தொடர்பில் தொம்பே பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரியும் நான்கு பொலிஸ் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மெக்சி புறொக்டர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் குற்றவியல் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தற்போது விசாரணைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொம்பே பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(4-2)







சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறுவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும், சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டசிறுவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# பயங்கரவாதக் குழுவின் தலைவர் ஹாஜி மாலிகான் கைதாகினர்



(காபூல்)

ஹக்கானி பயங்கரவாத குழுவின் மூத்த தலைவரும் தளபதியுமான ஹாஜி மாலி கான் என்பவரை நேட்டோ படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

ஆப்கானிஸ்தானில் இயங்கிவரும் ஹாக்கானி குழுவுக்கும் பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.க்கும் இடையில் தொடர்பு இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றசாட்டி வந்தது.

அதனால் பாக்.-அமெரிக்கா இடையிலான உறவு மிகச் சிக்கலானது. இந்நிலையில் ஹக்கானி குழுவின் மூத்த தலைவரும் தளபதியும் ஹக்கானி குழுத் தலைவர் சிராஜ் ஹக்கானியின் மாமாவுமாகிய ஹாஜி மாலிதான் என்பவரை ஆப்கானின் பாக்டியா மாகாணத்தில் நேற்று முன்தினம் நேட்டோவின் சர்வதேச பாதுகாப்பு உதவிப் படையினர் (ஐ.எஸ்.ஏ.எப்) கைது செய்தனர்.

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் நடந்த தாக்குல்களில் இவருக்கு தொடர்பிருப்பதாகவும் பாகிஸ்தானுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைதுல்லா மகூத்துக்கும் சிராஜுக்கும் இடையில் இவர் தூதராகச் செயற்பட்டு வந்தார். ஆப்கான் அதிகாரிகள் இவரை ஹக்கானி குழுவின் மூளை என்று குறிப்பிட்டுள்ளனர்.

கானின் கைது குறித்து ஐ.எஸ்.ஏ.எப். வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஹக்கானி குழு மீதான தேடல் நடவடிக்கைகளில் இந்த கைது குறிப்பிடத்தக்க மைல்கல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)

# பின்லேடனை அமெரிக்கா கொன்றமையே பாக்.-அமெ.வின் விரிசலுக்குக் காரணம்

## ஒபாமா புதிய விளக்கம்



அமெரிக்கத் தூதரை பாகிஸ்தான் கைது செய்தது, பின்லேடனை அமெரிக்கப் படைகள் சுட்டுக் கொன்றது போன்ற காரணங்களால் இருநாடுகளின் உறவு பாதிக்கப்பட்டுள்ளது என ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய எதிரியான அல்கொய்தா பயங்கரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் பாதுகாப்பு மிகுந்த அபோதாபாத்தில் தங்கியிருந்தார்.

அமெரிக்கத் தூதரக அதிகாரி ரேமண்ட் டேவிஸ் என்பவரை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர்.

ஹக்கானி பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு அனைத்து உதவிகளையும் செய்து வருவதாக அமெரிக்க இராணுவ தலைமை தளபதியாக இருந்த மைக் முல்லன் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க நாடாளுமன்றத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தாக்கல் செய்த அறிக்கையில் விபரங்களை பிடி.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

25 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் 2011 ஜனவரி முதல் ஜுன் வரையிலான நிகழ்வுகள் ஆராயப்பட்டுள்ளன. ஓகஸ்ட் மாதத்தில் செய்யப்பட்ட மதிப்பீடும் இடம் பெற்றுள்ளன.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பின்லேடன் பதுங்கியிருந்த இடத்தை சோதனையிட்டது, மோதலில் அவர் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்களால் இருதரப்பு உறவு பாதிக்கப்பட்டது.

விக்கலீக்ஸ் வெளியிட்ட முக்கிய தகவல்களை ஊடகங்கள் பெரிதுபடுத்தியதாலும் இது மேலும் மோசமடைந்தது. அமெரிக்கத் தூதரக அதிகாரியைக் கடத்தி கைது செய்த பாகிஸ்தானின் நடவடிக்கை இருதரப்பு உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியது.

பின்லேடன் கொலைக்கு பின்னர் பாகிஸ்தானில் இருந்த அமெரிக்க இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்க வலியுறுத்தப்பட்டது. பாகிஸ்தான் இராணுவத்துக்கு அமெரிக்கா அளித்து வரும் பயிற்சிகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவிடம் பாகிஸ்தான் அறிவுறுத்தியதாகவும் அந்த அறிக்கையில் ஒபாமா தெரிவித்துள்ளார். (4-2)

# இந்த மாதத்தில் உலகின் சனத்தொகை 700 கோடி

## ஐ.நா.மக்கள் தொகை பிரிவு தெரிவிப்பு

இந்த மாதத்தில் உலகின் மொத்த மக்கள் தொகை எண்ணிக்கை 700 கோடியாகிவிடும் என ஐ.நா.வின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 2100 ஆம் ஆண்டிற்குள் இத்தொகையானது ஆயிரம் கோடியாக அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1804 ஆம் ஆண்டு வரை உலகின் மொத்த மக்கள் தொகை 100 கோடியாக இருந்தது. 1960 களில் 300 கோடியாக அதிகரித்தது. இன்னும் ஒரு நூற்றாண்டில் ஆயிரம் கோடியாக உயர்ந்து விடும் மக்கள் தொகை அதிகரிப்பு வளர்ந்து வரும் நாடுகளில் தான் காணப்படுகின்றது. உலகில் மக்கள் தொகை அதிகரிப்பு பட்டியலில் இடம்பெற்றுள்ள 10 நாடுகளில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று வளர்ந்த நாடுகள் மட்டும் தான் இடம்பெற்றுள்ளன.

இந்த அதிகரிப்புக்கு பொருளாதார வளர்ச்சி, பிறப்பு விகிதம் அதிகரிப்பு. இறப்பு விகிதம் குறைவு ஆகிய காரணங்களை நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதேநேரம் கருத்தடை வசதிகளை அதிகளவில் மக்கள் உபயோகப் படுத்தும் போது தான் பிறப்பு விகிதம் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர். (4-2)

# துப்பாக்கிக் குண்டைவிட குரலுக்கே வலிமை அதிகம்

## காந்தியடிகளுக்கு பான் கீ மூன் புகழாரம்

(நியூயோர்க்)

மகாத்மா காந்தியின் அகிம்சைக் கொள்கை துனிசியா முதல் எகிப்து வரையிலான கொடுங்கோல் அரசுக்களை வீழ்த்த அந்த நாட்டு மக்களுக்கு பயன்பட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மகாத்மா காந்திக்கு புகழாரம் சூட்டினார்.

துப்பாக்கிக் குண்டை விட மக்களின் குரலுக்கே வலிமை அதிகம் என்பதை இந்த நாடுகளின் மக்கள் நிரூபித்துள்ளனர் என்றார் அவர். மகாத்மா காந்தியின் பிறந்த நாள் விழாவையொட்டி நியூயோர்க்கில் சர்வதேச அகிம்சை தின நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் உரையாற்றுகையில்,

அமைதியான வழிமுறைகளைப் பின்பற்றுவதில் மகாத்மா காந்தி உறுதியுடன் இருந்தார். கடந்த ஆண்டு மத்திய கிழக்கு நாடுகிலும் வட ஆபிரிக்க நாடுகளிலும் ஏற்பட்ட மக்கள் எழுச்சி அகிம்சையின் வலிமையை பறைசாற்றியது. குறிப்பாக துனிசியா, எகிப்து நாடுகளைச் சேர்ந்த மக்கள் நெடுங்காலமாக ஆட்சியில் இருந்த மக்கள் விரோத ஆட்சிகளை அகற்ற அகிம்சை முறைகளை கையாண்டதன் மூலம் இதேபோன்று பாதிக்கப்பட்டுள்ள மற்ற சில நாடுகளின் மக்களையும் சிந்திக்க தூண்டினர். எனினும் இது சுலபமான பாதை அல்ல.

அகிம்சை பாதையை தேர்ந்தெடுத்த துணிச்சல் மிக்கவர்கள் பலர் தங்களது எதிரிகளை வீழ்த்தியுள்ளனர். அகிம்சை தன்னை எதிர்கொள்பவரை பிரமிக்க வைக்கிறது. இதன் மூலமே அது வெற்றி பெற்றது.

போரைக் கைவிட்டு புத்த மதத்தை தழுவிய மாமன்னர் அசோகர் அமைதிக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தார். இந்தியாவின் இந்த பாரம்பரிய முறையை சுதந்திரப் போராட்டத்தை வழி நடத்த மகாத்மா காந்தி பயன்படுத்தி வெற்றி பெற்றார்.

தென் ஆபிரிக்காவில் மகாத்மா காந்தி பெற்ற அனுபவங்களே அவர் அகிம்சை பாதையில் செல்ல தூண்டுகோளாக இருந்தது. அவரது பணி மார்டின் லூதர் கிங் உள்ளிட்டோருக்கு வழிகாட்டியாக அமைந்தது.

எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய அகிம்சை வழிமுறை கடந்த ஓராண்டாக உலகையே மாற்றியுள்ளது. அமைதிக்குப் பதிலாக ஆயுதங்களில் அதிக முதலீடு செய்துள்ள நாடுகளுக்கு இந்த மாற்றம் கடினமானது தான்.

எனினும் அகிம்சையை தேர்ந்தெடுத்துள்ள மக்களின் மனஉறுதி தொடருமானால் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும் என்றார். (4-2)




# ஒரு உடல், இருமுகங்களையுடைய பூனை 12 ஆண்டுகள் உயிர்வாழும் அதிசயம்


(வோர்செஸ்டர்)

இரு முகங்கள், இரு வாய்கள், மூன்று கண்கள் கொண்ட பூனையைப் பார்த்திருக்கிறீர்களா? இது பான்ற அதிசப் பிறவிகள் பிறப்பது சகஜம் தான் என்றாலும் அவை நீண்ட காலம் உயிருடன் இருப்பது பேரதிசயம் அல்லவா? அப்படி ஒரு பூனை அமெரிக்காவில் 12 ஆண்டுகளாக நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் மாகாணத்தில் நார்த் கிராப்டனில் இயங்கி வரும் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றில் பணியாற்றி வருகிறார் மார்ட்டி ஸ்டீவன்ஸ் என்ற பெண். 12 ஆண்டுகளுக்கு முன் ஒருவர் இரு முகங்கள் உள்ள பூனைக்குட்டி ஒன்றைக் கொண்டு வந்தார். அந்தப் பூனை பிறந்து ஒரு நாள் தான் ஆகியிருந்தது. ஆனால் அதற்கு இரு முகங்கள், இரு வாய்கள், இரு மூக்குகள் மற்றும் மூன்று கண்கள் இருந்தன.

அதிசயப் பிறவியான இது உயிர் பிழைக்குமோ, பிழைக்காதோ என்ற சந்தேகத்தில் கால்நடைக் கல்லூரியிலே விட்டுவிடலாம் என்ற முடிவோடுதான் அந்த நபர் பூனையை கொண்டு வந்திருந்தார். தற்செயலாக பூனையைப் பார்த்த ஸ்டீவன்ஸ்,

தான் அதை வாங்கி வளர்க்க ஆசைப்படுவதாகத் தெரிவித்தார். வந்த நபரும் பூனையை ஸ்டீவன்சிடம் கொடுத்துவிட்டு சென்றார்.



அதன்பின் ஸ்டீவனிடம் தான் அந்த பூனை வளர்ந்தது. கடந்த 12 ஆண்டுகளாக எவ்வித நோயும் பாதிப்பும் இல்லாமல் திடகாத்திரமாக உள்ள அந்தப் பூனைக்கு பிராங்க் அண்டு லூயி என்று ஸ்டீவன்ஸ் பெயரிட்டுள்ளார்.

பொதுவாக இதுபோன்ற அதிசயப் பிறவிகள் சிறிது காலம் மட்டுமே உயிர் வாழும். சுவாசிப்பதில், உண்பதில், செரிமானம் ஆவதில் பல பிரச்சினைகள் அடுத்தடுத்து தோன்றி அவற்றின் உயிர்களை காவு கொண்டு விடும். ஆனால் அதிசயத்திலும் அதிசயமாக பிராங்க் அண்டு லூயி கடந்த 12 ஆண்டுகளாக திடகாத்திரமாக வாழ்ந்து வருகின்றது. இரு வாய்கள், இருந்தாலும் ஒரு வாய் வழியாகவே உண்கிறது. மூன்று கண்கள் இருந்தாலும் இரண்டின் வழியாகத் தான் பார்க்கிறது. ஆரம்பத்தில் இதற்கு உணவு ஊட்ட மிகச் சிரமப்பட்டேன். ஒவ்வொரு நாளும் இது உயிருடன் இருப்பதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

மிகுதி வாழ்நாளையும் லூயி ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என நான் ஆசைப் படுகின்றேன் என்று பாசத்துடன் சொல்கிறார் ஸ்டீவன்ஸ். கடந்த 12 ஆண்டுகளாக எவ்வித பாதிப்பும் இல்லாமல் லூயி வாழ்ந்து வருவதால் அடுத்தாண்டுக்கான கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறப்போகிறது. (4-2)

தடைகளுக்குள்ளேயே தேடு
தங்கமே உனக்கு கிடைக்கும்
- சுப்பிரமணியம் சந்திரசேகர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஐ.நாவில் ஜனாதிபதி மகிந்தவின் உரை; ஆசனத்திற்கு அலைந்த சவேந்திர சில்வா

(நியூயோர்க்)

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போது ஐ.நாவுக்கான சிறிலங்காவின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அமர்வதற்கு ஆசனமில்லாமல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா.பொதுச்சபையில் ஜனாதிபதி கடந்த 23ஆம் திகதி காலை உரையாற்றியிருந்தார். அன்றைய நாள் 35 நாடுகளின் தலைவர்களுக்கு உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

எல்சல்வடோர் நாட்டின் தலைவருக்கு அடுத்து 6ஆவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றியிருந்தார்.

ஐ.நா.பொதுச்சபையில் அதிகளவு நாடுகளின் தலைவர்கள் அன்று உரையாற்றியதால் ஒவ்வொரு நாட்டுக்கும் குறிப்பிட்டளவு ஆசனங்களே ஒதுக்கப்பட்டிருந்தன.

சிறிலங்காவுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களை மகிந்த ராஜபக்ஷவுடன் சென்றிருந்தவர்களுடன் நிரப்பிக் கொண்டுள்ளதாலேயே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமர்வதற்கு ஆசனம் கிடைக்கவில்லை.

ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் முக்கிய பிரமுகர்கள் அதிகாரிகள் என்று 100இற்றுக்கும் அதிகமானோர் நியூயோர்க் சென்றிருந்தனர்.

இதனால் அமர்வதற்கு இடம் கிடைக்காமல் அங்கும் இங்கும் அழைந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, சிறிலங்காவுக்கு பின்புறமாக திமோர் லெஸ்தே (கிழக்கு திமோர்) நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட ஆசணம் ஒன்றில் அமர்ந்து கொண்டு ஜனாதிபதியின் உரையை செவிமடுத்தார்.

அதேவேளை ஜானாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போது ஐ.நா. பொதுச்சபையில் ஏனைய நாடுகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகவே காட்சியளித்தனவாம்.

தனது உரையைக் கேட்பதற்கு அதிகளவு ராஜதந்திரிகள் வராதது ஜனாதிபதிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதாகவும் இதனால் தனது உரையை முதலாவது நாளில் ஒழுங்கு செய்யத்தவறியதற்காக மேஜர்ஜெனரல் சவேந்திர சில்வாவை அவர் கடிந்து கொண்டதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# நவராத்திரி விழா சிறப்பு நாடகம் குற்றக் கூண்டில் யாழ்.மின்சாரசபை

மாணவர்களே! இது நவராத்திரி காலம் என்பதால் நாடகம் ஒன்றைத் தயாரித்து அதனை அரங்கேற்றுங்கள் என்று கூறினோம்.

மாணவர்களின் ஆளுமைத்திறனை வளர்ப்பதில் பொறுப்புக்களை துணிந்து ஏற்றுக்கொள்ள வைப்பது முக்கியமானது என்ற அடிப்படையில் மாணவர்கள் தயாரித்த நாடகத்தை மேற்பார்வை எதுவும் செய்யாமல் விட்டுவிட்டோம்.

மாணவர்கள் தாங்கள் எழுதி நெறியாள்கை செய்த நாடகத்தை அரங்கேற்றினார்கள். நாடகத்தை பார்த்த போது அதிர்ந்து போனோம். இதோ! நவராத்திரி விழா. 'குற்றக் கூண்டில் யாழ்ப்பாண மின்சார சபை' நாடகம் அரங்கேறுகிறது.

பாத்திரங்கள் : துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி, மாணவர்கள், இலங்கை மின்சார சபையின் யாழ். மாவட்ட உயர் அதிகாரிகள்.

இதோ நாடகம்! பார்த்து மகிழுங்கள் என்ற அறிவிப்போடு திரை விலகியது.

துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் பத்மாசனத்தில் அமர்ந்திருந்தவாறு மாணவர்களே! உங்கள் பக்தியை மெச்சினோம். என்ன வரம் வேண்டும் கேளுங்கள்?

மாணவர்கள் : தாயே! நாங்கள் ஒழுங்காகக் கற்பதற்கு வசதியில்லாமல் உள்ளது.

தேவியர் : ஒழுங்காக கற்பதற்கு முடியாமல் உள்ளதா? ஒன்பது இரவுகள் எங்களை வழிபட்டு பத்தாவது நாள் விஜயதசமி கொண்டாடியும் உங்களால் படிக்க முடியவில்லையா? என்ன வசதியில்லை கூறுங்கள் நாங்கள் அதனைத் தருகிறோம்.

மாணவர்கள் : தாயே! நாங்கள் படிக்கும் போது அதி லும் பரீட்சைக்குப் படிக்கும்போது மின்சாரத்தை நிறுத்திவிடுகிறார்கள் அதனால் எங்கள் படிப்பு பாதிக்கப்படுகின்றது.

தேவியர் : அபத்தம்! அபத்தம்! நாங்கள் சக்திகளாக இருக்கும் போது உங்களுக்கு மின்சக்தி இல்லையா?

துர்க்கை : யாரங்கே! மின்சார சபை அதிகாரிகளை அழையுங்கள்.

மின் அதிகாரிகள் : தாயே! நமஸ்காரம்.

துர்க்கை : யாழ்ப்பாணத்தில் ஒழுங்காக மின்சாரம் வழங்க முடியுமா? இல்லையா? (அதட்டல் தொனியில்)

மின் அதிகாரிகள் : வழங்கலாம் ; ஆனால் திருத்த வேலை...

துர்க்கை : எவ்வளவோ காலமாகத் திருத்துகிறீர்கள்? திருத்தம் செய்தால் தடையில்லாமல் அல்லவா மின்சாரம் கிடைக்க வேண்டும்? (இதன்போது இடையில்)

இலட்சுமி : காசை ஒழுங்காக அறவிடுகிறீர்களா?

மின் அதிகாரிகள் : உங்கள் அருளால் அதற்கு குறையில்லை.

சரஸ்வதி : பரீட்சைக் காலத்தில் கூட மின்சாரத்தை நிறுத்துகிறீர்களே. இது நியாயமா?

மின் அதிகாரிகள் : (மௌனம்)

துர்க்கை : இனிமேல் திருத்தவேலைகளுக்காக மின்சாரம் தடைப்படக் கூடாது. தற்காலிக இணைப்புக்கள் மூலமாக மின்சாரம் வழங்க வேண்டும். இரவு வேளைகளில் மாணவர்களின் படிப்பை மின்சாரத் தடை பாதிக்கக்கூடாது. இது கடுமையான எச்சரிக்கை.

பொதுமக்கள் : தாயே! யாழ்ப்பாண மின்சார சபையை நம்பி எந்த நல்ல காரியமும் செய்ய முடியவில்லை. தாலிகட்டும்போது, புதுமனைப் புகுவிழா இப்படி நல்ல காரியத்தின் போதெல்லாம் மின்சாரம் தடைப்பட்டு விடுகிறது. நல்லது நடக்கும் போது இது பெரும் மன வேதனையை தருகிறது. தாயே! இதைத் தட்டிக் கேளுங்கள்.

துர்க்கை : (கோபாவேசத்துடன்) மகுடாசூரனை வதஞ் செய்த என்னை கோபம் ஊட்டாதீர்கள். இனிமேல் எக்காரணம்கொண்டும் மின்சாரம் தடைப்படக்கூடாது. சரியா?

மின்அதிகாரிகள்: இனிமேல் மின்சாரத்தை ஒழுங்காக வழங்குவோம் தாயே.

தேவியர் : நல்லது

(இவ்வாறு கூறும்போது மின்சாரம் தடைப்படுகிறது.)

சபையோர் : அட! நாடகத்தையாவது பார்க்க விடமாட்டியளோ! (திரை மூடிக்கொள்கிறது.)

# இலங்கைக்கு எதிரான அழுத்தங்களினால் ஐ.நா.பிளவுபடக் கூடிய அபாயம்

## ரிவிர பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான அழுத்தங்களினால் ஐக்கிய நாடுகள் அமைப்பு பிளவுபடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ரிவிர பத்திரிகையின் அரசியல் பத்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் இலங்கைக்கு எதிராக தேவையற்ற அழுதங்களை பிரயோகித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையான நாடுகள் இலங்கைக்குஆதுரவளிப்பதாககுறிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக கூடுதலாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் உறுப்பு நாடுகள் பிளவடைந்து வேறு ஓர் அமைப்பு உருவாகக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் இலங்கைக்கு எதிராக பழிவாங்கும் எண்ணத்துடன் செயற்பட்டு வருவதாக அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

# தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு டெங்கு ஒழிப்பு வாரம் கடைப்பிடிப்பு

(கொழும்பு)

தேசிய சுகாதார வாரம் நாளை ஆரம்பமாவதை முன்னிட்டு தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் ஆரம்பமாக இருப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் தற்போது அனைத்து மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கும் பிரதேச சுகாதார பணிப்பாளர்களுக்கும் பிரதேச நோய்த் தடுப்பு அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

நுளம்பு ஒழிப்பு வாரத்தில் நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை அடையாளங்கண்டு அவற்றை துப்புரவு செய்தல், நுளம்புகள் பெருகுமிடங்களை கொண்டுள்ள காணியுரிமையாளருக்குக் கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவற்றை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நாடு தழுவிய நுளம்பு ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு பிரிவு ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் முதன்முறையாக சுகாதாரப்பிரிவின் அபிவிருத்திக்காக அனைத்துப் பிரிவினதும் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வாரத்தின் முதலாவது நாளான நாளைய தினத்தை பொது மக்கள் சேவை தினமாக பெயரிடப்பட்டுள்ளது. (4-12)

# பூநகரி கமநல சேவை நிலையத்தில் மானிய உரத்தைப் பெறுவோருக்கு

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலைய எல்லைப் பரப்பினுள் கால போக விவசாயத்தில் நெற்பயிற்செய்கையில் ஈடுபட்டுள்ள 19 கமக்கார அமைப்பு பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கால போக விவசாயத்திற்கான மானிய விலையில் வழங்கப்படவுள்ளன.

இவ்வுரவகைகள் பூநகரி கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நாளை செவ்வாய்க்கிழமை ஞானிமடம் கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படவுள்ளதாக பூநகரி கமநல சேவை அலுவலர் ந.சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மானிய உரத்தைப் பெற விரும்பும் விவசாயிகள் தமது பகுதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டமைக்கான உறுதிப் படுத்தலுடன் 2011 ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரிப்பணமும் செலுத்தியிருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4-12-84)

# இலங்கையருக்கு 90 கசையடிகள்

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் தலைமறைவான பணிப்பெண் ஒருவரை தனது வீட்டில் தங்க வைத்த குற்றச்சாட்டுக்குள்ளான இலங்கையர் ஒருவருக்கு சவூதி அரேபிய நீதிமன்றம் ஒன்று மூன்று மாத சிறைத்தண்டனையும் 90 கசை அடிகளும் விதித்ததுடன் அங்கிருந்து அவரை நாடுகடத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி இலங்கைப் பணிப் பெண்ணுக்கு தான் உதவியளிக்க விரும்பியதாக ஆனால் அவருடன் எந்த உறவையும் கொண்டிருக்கவில்லை எனவும் அந்நபர் தெரிவித்துள்ளார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## இறைவனது கவிதை

மனித குலத்தின் விதியை நிர்ணயிப்பதற்குச் செயற்பட்டு வரும் எல்லாச் சக்திகளிலும் சமயச் சக்தியே ஆற்றல் வாய்ந்ததாக உள்ளது.

அகத்திலும் புறத்திலும் இயற்கையுடன் போராடி அதை வெற்றி கொள்பவனே மனிதன் ஆகிறான். என்னுடைய பணித்திட்டம் யாது? முதலில் மனித குலத்தைப் பார்த்து அழிக்காதே என்ற கொள்கையை எடுத்துரைப்பேன். சிலைகளை உடைத்து எறியும் சீர்திருத்தவாதிகள் இதுவரை உலகிற்கு செய்த நன்மைகள் எதுவுமில்லை. எதையும் உடைக்காதீர்கள். எதையும் கீழே தள்ளி நாசமாக்காதீர்கள். எதையேனும் உருவாக்க முடியுமானால் அதற்கு முயற்சி செய்யுங்கள். முடியாது போனால் இரண்டு கைகளையும் கட்டிக் கொண்டிருங்கள். என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். உபகாரம் செய்யமுடியவில்லை என்றாலும் அபகாரம் செய்யாமலாவது இருங்கள். ஒருவனுக்கு எதிலாவது திடநம்பிக்கை பூர்வமாக இருக்குமானால் அதை நாசமாக்கும் வகையில் எந்த வார்த்தையும் கூற வேண்டாம். இரண்டாவதாக நான் செய்ய விரும்புவது ஒரு மனிதனை அவன் எங்கே நிற்கிறானோ அங்கிருந்தே அவனை உயர்த்துவதற்கு முயல்வதுதான்.

ஒரு குழந்தைக்கு கற்றுக் கொடுக்க முடியும் என்றா நீ நினைக்கிறாய்? அது தானாகவே கற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களை உண்டாக்கித் தருவதும் இடர்பாடுகளை நீக்குவதும் தான் உன் கடமை.

# நியூசிலாந்தின் பல்கலைக்கழகங்கள்

தெற்கு பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள முக்கிய நாடுகளில் ஒன்றான நியூசிலாந்து ஒரு அழகான நாடும் கூட. வெளிநாட்டிற்கு சென்று கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு இந்நாடும் ஒரு முக்கிய இலக்குதான். இங்கே பல புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒவ்வொரு துறை சார்ந்த கல்விக்கு பெயர் பெற்று விளங்குகிறது. இந்த சிறிய நாட்டில் மொத்தமே 8பல்கலைக்கழகங்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தப்பல்கலைக்கழகங்கள்,

ஆக்லாந்து (Auckland) பல்கலைக் கழகம் –ஆக்லாந்து (Auckland)

நியூசிலாந்து நாட்டிலேயே முதன்முதலாகதொடங்கப்பட்ட இப்பல்கலைக்கழகத்தில் கலைப்படிப்புகள், வணிகப்படிப்புகள் படைப்பாக்க கலை மற்றும் தொழிற்துறை படிப்புகள், கல்வியியல் படிப்புகள் பொறியியல் படிப்புகள், சட்டப் படிப்புகள், மருத்துவம் சார்ந்த படிப்புகள், அறிவியல் படிப்புகள் போன்றவை இளநிலை, முதுநிலை பட்ட டிப்ளோமா, முதுநிலை டிப்ளோமா, கலாநிதி பட்டம் போன்ற பல நிலைகளில் வழங்கப்படுகின்றன.


கலைப்பாடங்களை பொறுத்தளவில் அதிக பிரிவுகளில் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன.

கேன்டர்பரி (Canterbury) பல்கலைக் கழகம் கிறைஸ்ட்சர்ச் (Christchurch)

இப்பல்கலைக்கழகத்திற்கு வருடம் சுமார் 70 விசிட்டர்கள் வருகை புரிகிறார்கள். இதன்மூலம் கற்பித்தல் துறையில் முன்னேற்றம் ஏற்படுகின்றது. இப்பல்கலையில் கடந்த 40 வருடங்களாக ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மாணவர்கள் படித்து வருகிறார்கள். தற்சமயம் மொத்தம் 70 நாடுகளிலிருந்து 2000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள்.

இப்பல்கலைக்கழகமானது நியூசிலாந்திலேயே சிறப்பு இளநிலைப்பட்டங்களைப் படிப்பதற்கு பெயர்பெற்ற ஒன்றாக விளங்குகிறது

வைகடோ(Waikato)பல்கலைக்கழகம் - ஹாமில்டன்(Hamilton) இப்பல்கலையில்,பொதுவாக,ஆசிய–பசுபிக் நாடுகளிலிருந்தே அதிக மாணவர்கள் படிக்கிறார்கள் என்றாலும்,வட அமெரிக்கா,மத்திய கிழக்கு நாடுகள்,ஜேர்மனி,இலங்கை மற்றும் தென் பசுபிக் தீவுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து



படிக்கிறார்கள். முகாமைத்துவம் தொடர்பான படிப்புகளை மேற்கொள்ள,இப் பல்கலையானது ஒரு சிறந்த தேர்வாக உள்ளது.

மாசே(Massey) பல்கலைக்கழகம்- வடக்கு பால்மர்ஸ்டோன்(North Palmerston), வெலிங்டன்(Wellington) மற்றும் ஆக்லாந்து (Auckland)

படிப்பின் போது,சிறந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களும்,அதற்கான வழிகாட்டுதல்களும்,இதர உதவிகளும் இப்பல்கலையில் சிறப்பான முறையில் வழங்கப்படுகின்றது. இதன் பொருட்டு, இப்பல்கலைக் கழகமானது நியூசிலாந்து நாட்டிலேயே பெயர் பெற்று விளங்குகின்றது. இப்பல்கலைக்கழகத்திற்கு மேற்கண்ட மூன்று வளாகங்கள் உண்டு.

லிங்கல்ன்(Lincoln) பல்கலைக்கழகம்- கிறைஸ்ட்சர்ச் (Christchurch)

மனித வாழ்வில் எப்போதுமே மகத் தான, முதன்மையான,உயர்ந்த இடத்தைப்பெற்றிருப்பது விவசாயம். அத்தொழிலின் வெற்றியின் மூலம் தான், மனித இனம் இந்த உலகில் நீடித்து இருப்பதற்கான சாத்தியம் உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த வேளாண்மை துறைக்கென்றே,பல பிரத்தியேகமான படிப்புக்களை சிறப்பான முறையில் நடத்துவதில், லிங்கல்ன் பல்கலைக்கழகம் பெயர் பெற்று விளங்குகிறது.

ஓடாகோ (Otago)பல்கலைக்கழகம்- டுனதின்(Dunedin)

மருத்துவம் சார்ந்த படிப்புகளை மேற் கொள்ள நியூசிலாந்து நாட்டில் பெயர் பெற்ற ஒரு பல்கலைக்கழகமாக இந்த பல்கலைக் கழகம் திகழ்கிறது.

இப்பல்கலையில் படித்த சுமார் 77 ஆயிரம் மாணவர்கள், 120 க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்கி றார்கள். இதை தவிர, இப் பல்கலையின் பழைய மாணவர் அமைப்புகள், லண்டன், சிங்கப்பூர், சிட்னி, மெல்பேர்ன் மற்றும் கோலாலம்பூர் போன்ற உலகின் முக்கிய நகரங்களில் உள்ளன.

நியூசிலாந்தின் எந்தப் பல்கலைக்கழகத்தையும் விட,ஓடாகோ பல்கலைதான் அதிகளவிலான முதுநிலை ஆராய்ச்சி மாணவர்களை கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு வாக்கில் முதுநிலைப்படிப்பில் சேர்ந்துள்ள 4ஆயிரம் மாணவர்களில் ஆயிரத்து 200 பேர் கலாநிதிப்பட்ட மாணவர்கள். ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பல்வேறு வகையான உதவித்தொகைகள் இப்பல்கலையால் வழங்கப்படுகின்றது.

விக்டோரியா (Victoria) பல்கலைக் கழகம்- வெலிங்டன் (Wellington)

நியூசிலாந்து நாட்டிலேயே கட்டடக் கலை தொடர்பான படிப்புகளை மேற்கொண்டு இப்பல்கலைக்கழகம் புகழ் பெற்று விளங்குகிறது. இப்பல்கலையானது 40 ஆராய்ச்சி நிறுவனங்கள்மற்றும்மையங்களைகொண்டுள்ளது. மேலும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பையும் கொண்டுள்ளது.

எயுடி (AUT) பல்கலைக்கழகம்– ஆக்லாந்து (Auckland)

நியூசிலாந்து நாட்டின் மூன்றாவது பெரிய பல்கலை திகழ்கிறது. இப்பல்கலை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. நியூசிலாந்தின் பிற பல்கலைக் கழங்க ளைவிட, இப் பல்கலை பட்டதாரிகள், அதிகளவில் வேலைவாய்ப்புகளை பெறுகிறார்கள். வருடத்திற்கு,மார்ச் மற்றும் ஜூலை மாதங்களில் இரண்டு முறை மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. பலவித தொழிற்சாலைகளுடன் ஒருங்கிணைப்பு உள்ளது.


சிறந்த ஆராய்ச்சி வசதிகள் இப்பல்கலையில் உள்ளது. வகுப்புகள் தனிப்பட்ட முறையிலும் கலந்துரையாடல் முறையிலும் இருக்கும். இங்கு சுமார் 85 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 4 ஆயிரம் மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். நியூசிலாந்து அரசாங்கத்தின் அங்கீகாரத்தை இப் பல்கலை பெற்றுள்ளது. இப் பல்கலைக்கு ஆக்லாந்திலேயே 3 வளாகங்கள் உள்ளன.

### அவற்றின் விபரங்கள்

மேற்கூறிய இந்த 8 பல்கலைக்கழகங்களே அந்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள். அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. அந்த ஒவ்வொரு கல்வி நிறுவனத்தைப்பற்றியும் விரிவான விபரங்களைத் தந்து,நியூசிலாந்து செல்ல நினைக்கும் யாழ்ப்பாண மாணவர்களுக்கு ஒரு தெளிவான புரிதலை தொடர்ந்து வழங்குவதே எமது நோக்கம். ,

அறிவுக் கலசம்
வலம்புரி
ஆர்.யூ.பாலமுருகன்

# பிரிட்டன் பொறியியலுக்கு எங்கும் வேலை, எதிலும் வேலை...



பொருளாதார தாராளமய உலகில் பொறியியல் படித்தவர்களுக்கு எங்காவது, எப்படியாவது ஒரு வேலை கிடைத்து விடுகிறது. ஆனால் அதே பொறியியல் படிப்பை பிரிட்டனில் படிப்பவர்களுக்கு இருக்கும் வேலைவாய்ப்புகள் அபரிதமானவை. உலகளாவிய அளவில் உள்ள பல நிறுவனங்கள் பிரிட்டனில் படித்த பொறியியல் பட்டதாரிகளை வேலைக்கு எடுப்பதில் அதிகளவு ஆர்வம் காட்டுகின்றன.

உயர்தரம் கற்பித்தல் கொள்கை, பிரதானமான உட்கட்டமைப்பு வசதி, ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பது மற்றும் பொறியியல் கல்வியை தொழிற்சாலை சூழலோடு இணைக்கப்படுவது போன்ற காரணங்கள் பிரிட்டன் பொறியியல் கல்வியை பிரபலமாக்குகின்றன. உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் பிரிட்டனில் இளநிலை மற்றும் முதுநிலை பொறியியல் படிப்புகளில் சேர விண்ணப்பிக்கின்றனர்.

### பொறியியல் படிப்பில் சேர்வதற்கான அடிப்படை தேவைகள்

### இளநிலை

படிப்புகளில் சேர கணிதம், பௌதீகம் மற்றும் இரசாயனவியல் பாடங்களில் நல்ல பெறுபேறுகளை எடுத்திருக்க வேண்டும். பாடசாலை படிப்பை முடித்தவுடன் பிரிட்டனில் படிப்பதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பல்கலைக்கழக மற்றும் கல்லூரிகள் சேர்க்கை சேவைகள் (யு.சி.ஏ.எஸ்) மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். இந்த அமைப்புதான் உயர்கல்விக்கான விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான மைய அதிகாரத்தை பெற்றுள்ளது. மொத்த 6 பல்கலைகளுக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

### இளநிலை

பொறியியல் படிப்பதற்கு 4 ஆண்டுகள் ஆகும். அதேசமயம் முதுநிலை படிப்பிற்கு ஒரு வருடம் மட்டுமே ஆகும். இங்கே படிப்பதற்கு TOEFL அல்லது IELTS தேர்வில் அதிக புள்ளிகள் பெற்றிருப்பது அவசியம்.

### சேரும் முன்பாக செய்யவேண்டியவை

ஒரு கல்வி நிறுவனத்தை தேர்வுசெய்து அதில் சேரும் முன்பாக மாணவர்கள் முறையான விசாரணை மேற்கொள்ள வேண்டும். சேர விரும்பும் பல்கலையின் புகழ் அதனுடைய தரவரிசை, இருப்பிடம், அதிலுள்ள வசதிகள் மற்றும் அந்த பல்கலை வழங்கும் பாடங்களின் விபரங்கள் போன்றவற்றை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். பல பல்கலைகள், மாணவர்கள் விரும்பும் தகவல்களை கொடுப்பதற்கு பல நாடுகளில் தங்களின் அலுவலகங்களை வைத்துள்ளன.

மேலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சேர விரும்பும் பல்கலை இணையத்தளத்திற்கு சென்று முழு விபரங்களையும் தெரிந்து கொள்வது நலம்.பிரிட்டன் பல்கலைகள் பல உதவித்தொகை திட்டங்களை வைத்திருப்பதால் பிரிட்டிஸ் கவுன்சிலிலுடன் அது தொடர்பாக பேசி தெரிந்து கொள்ளலாம். இதுபோன்று முன்னேற்பாட்டுப் பணிகளை 3 அல்லது 6 மாதங்களுக்கு முன்னதாகவே செய்துமுடித்தால் நல்லது. இதனால் கடைசிநேர அவசரத்தை தவிர்க்கலாம்.

பிரிட்டன் பல்கலைகள், ஏரோநாட்டிக்ஸ், பயோ இன்ஜினியரிங், சிவில், சுற்று சூழல் அறிவியல், மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் உள்ளிட்ட பல துறைகளில் சிறப்பு படிப்புகளை வழங்குகின்றன.

### புதிய படிப்புகள்

மாறிவரும் தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப புதிய படிப்புகள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. லண்டன் இம்பீரிச் கல்லூரியானது புதிய சிவில் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இலங்கையிலிருந்து படிக்க வரும் பெரும்பாலான மாணவர்களால் விரும்பப்படும் சில படிப்புகளும் பிரிட்டன் பல்கலைகளில் உள்ளன.

முதுநிலை படிப்புகளை எடுத்துக் கொண்டால் எம்.எஸ்.சி சஸ்டைநபில் எனர்ஜி சிஸ்டம்ஸ், எம்.எஸ்.சி சிக்னல் புரோசசிங் அண்ட் கொம்யூனிகேசன், எம்.எஸ்.சி எலக்ரோனிக்ஸ், அனலாக் சிஸ்டம் டிசைன், எம்.எஸ்.சி, பயோ எலக்ரானிக், எம்.எஸ்.சி கார்பன் கேப்ச்சர் அண்ட் ஸ்டோரேஜ், எம்.எஸ்.சி.சயன்ஸ் அண்ட் டெக்னாலஜி பாலிசி அண்ட் மனேஜ்மென்ட், எம்.எஸ்.சி பயோ மெக்கானிக்ஸ், எம்.எஸ்சி. ஸ்ட்ரக்சுரல் அண்ட் பயர் சேப்டி இன்ஜினியரிங் போன்ற பலவித படிப்புகள் மாணவர்களால் விரும்பப்படுகின்றன.

பிரிட்டனில் பலரும் பொறியியல் படிக்க விரும்புவதற்கு முக்கிய காரணம் நாம் முன்பே கூறியதைப் போல பல பெரிய உலகளாவிய நிறுவனங்களுடன் பிரிட்டன் பல்கலை மற்றும் கல்லூரிகளுக்கு இருக்கும் நல்ல தொடர்பேயாகும். இதைத்தவிர பல கல்வி நிறுவனங்கள் தொழில்துறை மற்றும் சந்தையில் தற்போதைக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதற்கேற்ப தங்களின் பாடத்திட்டங்களை வடிவமைத்துள்ளதும் முக்கிய காரணம். மேலும் மாணவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்தில் பிரிட்டன் கல்வி நிறுவனங்கள் அதிக அக்கறை செலுத்துகிளளன்றன.

### படிப்பதற்கான கட்டணம்

சமீபத்தில் ஏற்பட்ட 9 ஆயிரம் பவுண்டுகள் கட்டண உயர்வு பிரிட்டனில் படிக்க நினைக்கும் பல வெளிநாட்டு மாணவர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது மற்றும் அவர்கள் தங்களின் தேர்வை மாற்ற வைத்துள்ளது. ஆனால் இந்த கட் டண உயர்வானது இளநிலை பட்டப் படிப்பு நிலையில் தான் நிகழ்ந்துள்ளதே தவிர முதுநிலை அளவில் பெரிய கட்டண மாற்றம் எதுவும் நிகழவில்லை. முதுநிலை படிப்புகளுக்கு தேர்ந்தெடுக்கும் பல்கலை மற்றும் பாடங்களுக்கு ஏற்ப 13 ஆயிரம் பவுண்டுகள் முதல் 17 ஆயிரம் பவுண்டுகள் (அதற்கும் கூடுதலாக ஆகலாம்) வரை கட்டணங்கள் மாறுபடுகின்றன. இத்தகைய கட்டணங்களோடு ஒப்பிடுகையில் இள்நிலை படிப்பதற்கான 9 ஆயிரம் பவுண்டுகள் என்பது குறைவுதான். பல மாணவர்கள் இந்த தொகையை தரமான கல்விக்காக செலவழிக்க தயாராக இருப்பதாக தொடர்புடைய வட்டாரங்களில் கூறப்படுகிறது. பிரிட்டனில் பொறியியல் படித்துவிட்டு தாய்நாடு திரும்பினால் சரி அல்லது வேறு பல உலக நாடுகளில் குடியேறினாலும் சரி வேலைவாய்ப்பு 100 சதவீதம் நிச்சயம் என்றே கல்வியாளர்கள் பலரும் கூறுகின்றனர்.

பொறியியல் படிப்பதற்கான பிரிட்டனின் சில சிறந்த கல்வி நிறுவனங்கள்.

London Imperial College, Cambridge University, Oxford University, lough borough University, Edinbrugh University, Manchester University, SouthamptonUniversity, London University College, Glasgow University, Leeds University, Cardiff University, Nottingham University, Warwick University

# எழுச்சி பெறுமா பெங்களூர் அணி

# இன்று சோமர்சட் அணியுடன் மோதல்

(பெங்களூர்)

சம்பியன்ஸ்லீக்தொடரில் இன்றுபெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், சோமர்செட் அணிகள் மோதுகின்றன. இதில், முதல் வெற்றியை பதிவு செய்து, அரையிறுதிவாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள பெங்களூர் அணி காத்திருக்கிறது.

மூன்றாவது சம்பியன்ஸ் லீக் இருபது - 20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடக்கிறது. பெங்களூரில் உள்ள சின்னசாமி மைதானத்தில் இன்று நடக்கவுள்ள பி பிரிவு லீக் போட்டியில் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி, இங்கிலாந்தின் சோமர்செட் அணியை எதிர்கொள்கிறது.

**முதல் வெற்றி**

வாரயர்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகளுக்கு எதிரான போட்டியில் பெங்களூர் அணி தோல்வி அடைந்தது. அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள அடுத்த இரண்டு போட்டிகளிலும் நல்ல ரன்ரேட் அடிப்படையில் வெற்றிபெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது 3 புள்ளிகள் பெற்றுள்ள சோமர்செட் அணி, இன்றைய போட்டியில் வெற்றி பெறும் பட்டசத்தில் அரையிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக்கொள்ளும்.

**கைகொடுப்பாரா ஹெயில்**

பெங்களூர் அணியின் முதல்வரிசை வீரர்கள் சாதிக்காதது பின்னடைவான விஷயம். நான்காவது ஐ.பி.எல். தொடரில் ரன் மழை பொழிந்த கிறிஸ் ஹெயில், கடந்த இரண்டு போட்டியிலும் சொல்லிக் கொள்ளும்படி விளையாடவில்லை.

இவர் இன்று எழுச்சி பெறும் பட்சத்தில் இமாலய இலக்கை எதிர்பார்க்கலாம். காயம் காரணமாக டி வில்லியர்ஸ் வெளியேறியது ஏமாற்றம்.

டில்ஷான், விராத் கோலி, மயாங்க் அகர்வால், சௌரப் திவாரி, முகமட் கைப் உள்ளிட்டோர் அதிரடியாக ஓட்டங்களை குவிக்க வேண்டும்.

**பலவீனமான பந்து வீச்சு**

முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சகீர் கான் இல்லாத நிலையில், பெங்களூர் அணியின் பந்து வீச்சு பலவீனமாக உள்ளது. கடந்த இரண்டு போட்டியில் சந்தித்த மோசமான தோல்விக்கு பந்து வீச்சு தான் முக்கிய காரணம்.




டிர்க் நானஸ், ஸ்ரீநாத் அரவிந்த், அபிமன்யு மிதுன், ஹேறாலி, ஆசாத் பதான் உள்ளிட்ட வேகங்கள் எழுச்சி பெற வேண்டும். சுழலில் விக்டோரி ஆறுதல் அளிக்கிறார்.

**மேர்வி நம்பிக்கை**

கொல்கொத்தா அணிக்கு எதிராக சோபிக்கத் தவறிய சோமர்சட் அணியின் கிறிஸ் ஜோன்ஸ், பீற்றர் டிரிகோ ஜோடி இன்று சுப்பர் ஆரம்பம் அளிக்கவேண்டும்.

கொல்கொத்தாவுக்கு எதிராக அரைசதம் அடித்து அசத்திய வான் டெர் மேர்வி, இன்றும் நம்பிக்கை அளிக்கலாம். ஜேம்ஸ் ஹில்டிரத், நிக் காம்ப்டன் அருள் சுப்பையா உள்ளிட்டோர் நடுத்தர வரிசையில் கைகொடுக்கும் பட்சத்தில் நல்ல ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்யலாம்.

**தோமஸ் எதிர்பார்ப்பு**

சோமர்செட் அணியின் வேகப்பந்து வீச்சில் அணித்தலைவர் அல்போன்சா தோமஸ் நம்பிக்கை அளிக்கிறார். இவருக்கு லீவிஸ் கிரகோரி, பீற்றர் டிரிகோ உள்ளிட்ட வேகங்கள் ஒத்துழைப்பு அளித்தால் நல்லது. சுழலில் முரளி கார்த்திக் மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இவருடன் இணைந்து வான் டெர் மேர்வி, ஜோர்ஜ் டாக்ரல் சுழல்ஜாலம்காட்டும்பட்சத்தில்கலபவெற்றிபெறலாம்.

அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொள்ள இரு அணிகளுக்கு வெற்றி தேவைப்படுவதால், இன்றைய போட்டி விறுவிறுப்பாக இருக்கும்.

## ஆஸி. தொடரில் டி வில்லியர்ஸ் விலகல்

தென்னாபிரிக்காவின் ஒருநாள் அணியின் தலைவர் டி வில்லியர்ஸ் கை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் அவரால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரிலிருந்து விலகியுள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் தலைவரான பின்னர் அவர் விளையாடும் முதல் தொடர் இதுவாக இருந்தது.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் விக்கெட் காப்பாளரான டி வில்லியர்ஸ் சம்பின்ஸ் லீக் போட்டியில் விளையாடி வந்தார். அவர் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நடைபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பங்கேற்கவில்லை.

அவரது கையில் ஏற்பட்ட காயம் குணமடைய 6 வார காலத்திற்கு மேலாகும் என்பதால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 போட்டி மற்றும் ஒரு நாள் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

# நியூ சவுத் வேல்ஸ் வெற்றி மும்பை இந்தியன்ஸ் பாவம்

சிமித், ரோரரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் நியூ சவுத் வேல்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் சம்பியன் லீக் இருபது- 20 கிரிக்கெட் தொடரில் நேற்று சென்னையில் நடைபெற்ற போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த மும்பை இந்தியன்ஸ் அணியும் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணியும் மோதின.



இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 100 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிராங்லின் 51 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 42 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 15, சதீஸ் 14, ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரூவெட் கிளார்க், ஓ கீபீ தலா 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரார்க், கம்மின்ஸ் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 101 ஓட்டங்கள் எடுத்ததால் வெற்றி என்ற இலகுவான இலக்கை விரட்டிய நியூ சவுத் வேல்ஸ் அணி 6.2 ஓவர்களில் 28ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

எனினும் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சிமித்-ரோரர் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்க நியூ சவுத் வேல்ஸ் அணி 17 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 101 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் சிமித் 47 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட)45 ஓட்டங்களையும் ரோரர்28 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 26 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அகமெட் 3 விக்கெட்டுக்களையும் மலிங்க, சஹால் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் நியூ சவுத் வேல்ஸ் அணி 2 புள்ளிகளைப் பெற்றது.

# நடப்புச் சம்பியன் சென்னை அரையிறுதி வாய்ப்பையிழந்தது

நரைனின் சுழலில் சிக்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 12 ஓட்டங்களால் திரினிடாட் அன் ரொபாகோ அணியிடம் வீழ்ந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

இந்தியாவில் நடைபெற்று வரும் மூன்றாவது சம்பியன்ஸ் லீக் இருபது - 20 கிரிக்கெட் தொடரில் நேற்று சென்னையில் நடைபெற்ற போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மேற்கிந்தியத் தீவுகளின் திரினிடாட் ரொபாகோ அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய திரினிடாட் அன் ரொபாகோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 123 ஓட்டங்களையும் எடுத்தது.

இதில் பேர்கின்ஸ் 28 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 34 ஓட்டங்களையும் கூபர் 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 28 ஓட்டங்களையும் பாரத் 23, சிம்மோன்ஸ் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பொல்லிங்கர் 3 விக்கெட்டுக்களையும் ஜகதி 2 விக்கெட்டுக்களையும் பிரவோ, அஸ்வின் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 124 ஓட்டங்கள் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 12 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதில் டயானி பிரவோ 22 பந்துகளில்,(5 பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் 12 பந்துகளில் (2 சிக்ஸ்சர்கள் உட்பட) 18 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் நரைன் 4 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ராம்போல், கூபர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் திரினிடாட் அன் ரொபாகோ அணி தொடரில் தான் விளையாடிய மூன்றாவது போட்டியில்முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

இதேவேளை தொடரில் இரண்டாவது தோல்வியை சந்தித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

# ரட்வன்ஸ்கா சம்பியன்

பான் பசுபிக் ஓபன் டென்னிஸ் தொடரில் போலந்தின் ரட்வன்ஸ்கா சம்பியனானார். ஜப்பானின் டோக்கியோ நகரில் பான் பசுபிக் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் போலந்தின் ரட்வன்ஸ்கா, ரஷ்யாவின் சுவனரேவாவை எதிர் கொண்டார்.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ரட்வன்ஸ்கா 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் எளிதாக வெற்றிபெற்று சம்பியனானார்.

பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் ஹுப்பர், ரேமண்ட் ஜோடி, ஆர்ஜென்டினாவின் டல்கோ, இத்தாலியின் பெனிட்டா ஜோடியை வீழ்த்தி கோப்பை வென்றது.









## மன்னாரில் ...

நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

அந்நிறுவனத்தின் ஓர் அங்கமான கெய்ர்ன் லங்கா (பிரைவட்) லிமிட்டெட் எனும் நிறுவனம் மன்னார் பகுதியில் மேற்படி ஆய்வில் ஈடுபட்டுள்ளது.

சிப்யு எனும் அகழ்வுக் கப்பலை பயன்படுத்தி அப்பகுதியில் 3 கிணறுகளை கெய்ர்ன் நிறுவனம் தோண்டவுள்ளது. இதற்கான செலவு 110 மில்லியன் டொலர்களாகும். (ந-5)

## இலங்கை ...

அடங்கிய மனுவை,ஐயாயிரம் பேரின் கையொப்பத்துடன் அனுப்பி வைத்தால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நேற்று அறிவித்திருந்தது.

இது இவ்வாறிருக்க இவ்வறிவித்தல் வெளியான கையோடு இணையத்தளம் மூலமாக சுமார் மூவாயிரம் பேர் தங்கள் சம்மதத்தை தெரிவித்து தகவல் அனுப்பியுள்ளனர்.

இதேவேளை இது இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கான அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகத்தின் முதற்கட்ட நடவடிக்கை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## புனரமைப்பு ...

பயன்படுத்தப்படவுள்ளது.

2010ஆம் ஆண்டு டிசம்பர் தொடக்கம் 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை நாட்டில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக வட மத்திய ,மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மண் சரிவு,வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தங்கள் இடம்பெற்றன.

இதன்போது ஏற்பட்ட இழப்புக்கள் காரணமாக சமூக பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்படும் கடனுதவிக்கு வருடம் ஒன்றுக்கு சலுகை அடிப்படையில் 0.01 சதவீத வரி, அறவிடப்படும்எனவும் 10வருட சலுகைக் காலம் உட்பட 40வருடங்களில்கடன் திருப்பி செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## இலங்கையின் ...

தொடர்பாக அரசாங்கத்தின் போக்குகள் குறித்து இச்சந்திப்பில் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட்டதாக தெரிய வருகின்றது.

அத்துடன், அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் மற்றும் அரசாங்கத்திடம் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் குறித்து சம்பந்தன் ஸ்டீபன் சபெட்டிடம் விளக்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதன்போது இலங்கைத தமிழர் விடயத்தில் அமெரிக்க அரசாங்கம் அதிக கரிசனை கொண்டுள்ளதாக ஸ்டீபன் சபெட் தெரிவித்தார்.

இலங்கைக்கான-தனது விஜயத்தின் போது ஸ்டீபன் சபெட் இராஜதந்திர மட்டங்களில் பலரை சந்தித்ததுடன் யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார். (ந-5)

## போர்க் குற்றங்களில் ...

தற்போதைய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விளக்கியபோதே இதனைத் தெரிவித்தார்

சுமந்திரன் தெரிவித்த கருத்துகளின் முக்கியமான பகுதிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றது.

அரசாங்கத்துடன் நாம் மேற்கொண்டிருக்கும் இப்பேச்சுவார்த்தைகள் மூலம் ஏதாவது தீர்வு ஏற்படுமாக இருந்தால் அதற்கு சர்வதேச நாடுகள் வழங்கி வருகின்ற அழுத்தங்கள் மட்டுமே காரணமாக இருக்கும். ஏனெனில் போரிலே நாங்கள் வென்றுவிட்டோம். ஆகையால் இனி இனப்பிரச்சினை என்ற ஒன்று கிடையாது. இதுவரை இருந்ததெல்லாம் பயங்கரவாதப் பிரச்சினைதான். அதையும் தீர்த்துவிட்டோம் என்று சொல்கிற அரசாங்கத்தை, இல்லை. இதற்கெல்லாம் மூலகாரணமாக இருந்த அரசியற் பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும் என்று சொல்லி வற்புறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வைத்தது வெளியுலக நாடுகள்தான்.

எனவே பேச்சுவார்த்தையை மீண்டும் எப்படி அரசாங்கத்தை ஆரம்பிக்க வைத்தோமோ அந்த விதமாக பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிபடைவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கும் நடவடிக்கைகளையும் நாங்கள் தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்கிறோம்.

நான் இதற்கு முன்னதாக ஜேர்மன் நாட்டின் வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள மற்றும் அவர்களது பாராளுமன்றக் குழு ஆகியோரை சந்தித்து உரையாடிவிட்டு நோர்வே வெளியுறவு அமைச்சையும் விசேடமாக அமைச்சர் எரிக் சொல்ஹெய்மையும் சந்தித்து உரையாட வந்துள்ளேன்.

இலங்கை மீது சர்வதேச அரசுகளும் அமைப்புக்களும் பிரயோகித்து வருகின்ற போர்க் குற்ற நெருக்கடிகள்தான் இன்று அரசாங்கத்தை ஒரு பேச்சுவார்த்தையில் ஈடுபட தூண்டியுள்ளது. இந்த நெருக்கடி இன்னும் வலுவடையும் என்பது எமது எதிர்பார்ப்பு. இது மட்டுமல்ல இதைப் போன்று தற்போது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் இருந்து செயற்படுத்தப்படுகிற பல வேலைத்திட்டங்கள், காணிப் பறிப்பு எமது மக்களை இன்னும் அடிமைகளாகப் பாவிக்கிற நினைப்பு இராணுவ ஆட்சி போன்ற காரியங்களைக் கூட நாங்கள் சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து அரசிற்கு அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க மாட்டேன் என ஜனாதிபதி வெளிப்படையாகவே பேசி வருகிறார். ஆனால் இப்போதுள்ள அரசியல் அமைப்பு சட்டத்தின் படி காணி அதிகாரமும் காவற்றுறை அதிகாரமும் மாகாண சபைகளுக்கு பகிரப்பட்டிருக்கிறது. அது நடைமுறையிலே கொண்டு வரப்படாது இருந்தாலும் கூட சட்டத்திலே அது இருக்கிறது.

13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று அர்த்தமுள்ள அதிகாரப் பரவலை நான் செய்வேன் என்று இரு தடவைகள் இந்தியப் பிரதமருடன் சேர்ந்து ஜனாதிபதி கூட்டறிக்கை விட்டிருக்கிறார். எனவே இப்போது இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு குறைவாக ஒரு தீர்வு வரமுடியாது என்பது எங்களுடைய நிலைப்பாடாக இருக்கிறது. அதை விடக் கூடுதலாகத்தான் அதிகாரப் பகிர்வு இருக்கவேண்டும்.

இவ்வாறான உத்தரவாதத்தை ஜனாதிபதியே சர்வதேச சமூகத்திடம் கொடுத்திருக்கின்ற காரணத்தால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இப்போதுள்ளதை விட இன்னும் கூடுதலாக பகிரப்பட வேண்டும் என்பதில் நாங்கள் தீர்மானமாக இருந்து அந்த அடிப்படையில் பேசி வருகிறோம் என்றார். (ந-5)

## அனைத்துலக ஊடகங்கள் ...

அனுமதி கோரியிருந்தார்.

இந்த அழைப்பாணையை ஜனாதிபதி மகிந்த நீண்ட காலத்துக்குப் புறக்கணிக்க முடியாது என்றும் அழைப்பாணை சமர்ப்பிக்கப்பட்டதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் என்று தாம் நம்புவதாகவும் புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த நியூயோர்க்கில் குயின்ஸ்சில் உள்ள புத்த விகாரைக்கு வரும்போது அழைப்பாணையை கையளிக்க முனைந்ததாகவும், ஆனால் அவரது பாதுகாவலர்கள் அந்த ஆவணத்தை கையளிக்க முடியாமல் தடுத்து விட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அழைப்பாணை பெறுவதை அவர் தவிர்ப்பது தெளிவாகியுள்ளதால், நீதிபதிகள் மகிழ்ச்சியடையவில்லை என்றும் கூறியுள்ள புரூஸ் பெய்ன், இந்த அழைப்பாணையை பரிமாற ஊடகங்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த அழைப்பாணையை முழுமையாக வெளியிட முன்வருமாறு உலகிலுள்ள ஊடகங்களுக்கு குறிப்பாக இலங்கையிலுள்ள ஊடகங்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ந-5)

**அரிய சந்தர்ப்பம்...!**

அடகு வைத்துள்ள உங்கள் நகைகளை மீட்டு விற்பதற்கு அல்லது [வங்கி / நிறுவனம் ] இடம்மாற்றி வைத்து மேலதிக பணம் பெறுவதற்கு எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்

0774050936 [சேவை கட்டணம் அறவிடப்படும்]

வங்கிகள் / நிதிநிறுவனங்கள் தங்கப்பவுண் ஒன்றிற்கான முற்பணத் தொகையை மீண்டும் அதிகரித்துள்ளன.

24 கரட் - 47,000/= 22 கரட் - 42,000/=

(C-4617)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.